بسم الله الرحمن الرحيم

அல்கலாம்

AL-KALAM

பத்திராதிபர் :—கூ. அ. அப்துல் மஜீத்.

வால்யூம். 2	1925ஆம் ஜூலைமீ	பகுதி. 7

ஈதுல் அல்ஹா

(மௌலானா அபுல்கலாம் ஆஜாத் எழுதியது)

என் தொண்டையில் அதிக வலி இருந்து வருவதால் உஷ்ணத்தைக் கொடுக்கக் கூடிய ஒருவிதக் கருவியின் உதவியாலன்றி பேச நான் சக்தியற்றவனாயிருக்கிறேன். ஆனால் என் ஹிருதயத்திற்கும் ஆத்மாவுக்கு மிருந்துவருகின்ற கஷ்டத்தின் உண்மையான அளவை நீங்கள் அறிந்து கொள்ளமுடியுமா? தொண்டையிலிருந்து வரும் அவ்வலியை விட இக்கஷ்டம் என்னை அதிகமாக வதைத்து வருகிறது. பற்பல சிந்தனைகளிலிருந்து உண்டாகிக்கொண்டிருக்கும் பெரும் அலைகளும், ஹிருதயத்திற்குண்டாயிருக்கும் ஒருவித நோயும் என் மூளையைக் கட்டி, எழுதும் சக்தியை யிழக்கச் செய்திருக்கின்றன. ஆதலின் என் உணர்ச்சியை வெளியிட முடியாததால் எனக்கேற்பட்டிருக்கும் துன்பம் சாமான்யமானதல்ல.

நித்திரையில் மூழ்கிக்கிடப்பவர்களை விழிக்கச் செய்யவும் நற்சிந்தனைகளைத் தூக்கிவிடவும் ஹிருதயங்களுள் சிரேஷ்டமான உணர்ச்சியை யுண்டுபண்ணவும் ஆத்மாக்களுக்குப் புத்துயிரளிக்கவும், வருங்காலத்து நன்மையைக் கோறும் அறிவை விசாலமாக்கவும், முழுவரு

ஷத்திலும் "யௌமுல்ஹஜ்ஜு" என்னும் கௌரவமான நாள் ஒன்றே உண்டு.

உண்மையில் வேதத்தை யொட்டிய நற்காரியங்களுக்கு அடிப்படையைக்கோலி "மில்லத்தெஹனீபி" என்னும் சமயவகுப்பாருள் மாறுதலுண்டாக்கும் சிறந்த நாள் இதுவேயாகும். இந்நந்நாளில் அல்லாஹுதஆலாவுக்கும் அவனுடைய அடியார்களுக்கு மிடையிலுள்ள திரை நீங்கிவிடும். அன்றியும் அல்லாஹுதஆலாவை யடைவதற்கான வாயில் திறக்கப்பட்டு அல்லாஹுதஆலா உலகத்தாருக்களிக்கும் நன்கொடை ஜயம் ஆகியவைகளைக் கொண்டுவரும் "முசவ்விமீன்" என்னும் மலக்குகள் ஒவ்வொரு உறுதியுள்ள மூமின்களின் ஹிருதயத்தையும், ஒவ்வொரு உண்மை முஸ்லிம்களின் ஹிருதயத்தையும் தேடிப்பிடித்து அவைகளை அல்லாஹுத ஆலாவின் சமுகத்திற் கழைக்கின்றனர்.

"மறந்து திரியும் என்னுடைய அடிமைகளே! நீங்கள் எனக்குச் செய்து கொடுத்த வாக்குறுதியை முறித்து உங்கள் மீதே அநியாயத்தைப் புரிந்துகொண்டீர்கள். ஆனால் என் கிருபையிலுள்ள நம்பிக்கையை யிழந்து விடாதீர்கள். உங்களுடைய பாவங்கள் எத்தகையனவாயினும் நீங்கள் "தௌபா" செய்ய முற்படுவீர்களாயின் உங்களின் எல்லா பாவங்களையும் மன்னித்துவிடுவேன். ஏனெனின் நான் மிகப் பெரும் பாவங்களை மன்னிப்பவனாயும் கிருபையுள்ளவனாயுமிருக்கிறேன்" என அல்லாஹுத ஆலா கூறியுள்ளான்.

இத்தகைய காலத்தில் இத்தன்மையான சந்தர்ப்பத்தில் தெய்வீகம் பொருந்திய இவ்வேளையில் அல்லாஹுத ஆலா எவ்விண்ணப்பங்களையும் ஏற்றுக்கொள்ளும் நற்சகுனத்தில் என் மூளை கட்டுண்டு எந்நா அடக்கமுற்று என் அறிவின் முறைகள் சின்ன பின்னமாகி உதிரத்தில் நனைந்து போயிருக்கும் என் எழுதுகோல் தகுதியற்ற என் கரத்திலிருந்து அப்புறப்பட்டு எதையும் செய்ய முடியாத நிர்ப்பந்தத்திற்குள்ளாகி நிற்கின்றேன்.

இந்நாளோ உண்மையில் வருஷமெல்லாம் அடங்கிக் கிடந்த உணர்ச்சிகளும் சக்திகளும் வெளிக்கிளம்பி ஒரு வருஷத்தில் செய்யக்கூடிய காரியங்களை ஒரு நிமிஷத்தில் செய்து முடிக்கும் தினமாகும். வெகுகாலத்திற்குப் பின்னும் உலகம் இரத்த வெள்ளத்தின் புரட்சியில் செல்லுமாயின் மறதியைத் தொழிலாக்கிக்கொண்ட அறியாதநண்பர்களுக்கு என் நெஞ்சத்திலிருந்துவரும் இரத்த நதியைக் காட்டவும்

தயாராயிருக்கிறேன். இந்நதியால் வேண்டியவைகளை யெல்லாம் நனைத்து விடக்கூடும்.

என்கஷ்டமே எனக்குப் பரிகாரமும் செய்தது. பற்பல சிந்தனையும் வேலைத் தொந்தரவும் மறைந்து கிடந்த உணர்ச்சிகளும் என்னை என் படுக்கையிலிருந்து எழும்படி செய்துவிட்டன. ஆதலின் சந்தேகமின்றி வேலை செய்ய முற்பட்டுவிட்டேன்.

பரிசுத்தமான ஹஜ்ஜின் செய்தி

மறைதி என்னும் வேட்டைக் கிரையாகி விட்ட நண்பர்களே! மதவிசுவாச வகுப்பிலிருந்து எஞ்சி நிற்பவர்களே! உங்கள் மறைதியைச் சிந்திக்கும்போதெல்லாம் எனக்குக் கஷ்டமாயும், உங்களுக் கேற்பட்டிருக்கும் மயக்கத்தைக் கண்ணுறும் போது விசனமாயுமிருக்கின்றது. நீங்கள் உங்கள் உறுதியை யிழந்து திரிவதைப்பற்றி எனக்கேற்படும் சங்கடம் சாமான்யமானதல்ல. பூமியிலுள்ள மணல்களெல்லாம் இரத்தத்தால் நனைந்துகொண்டிருக்கும் இந்நாளில் புண்பட்டிருக்கும் உங்கள் ஹிருதயங்களையும் கஷ்டமடைந்து கொண்டிருக்கும் உங்கள் ஆத்மாக்களையும் இவ்விரத்த நதியில் மூழ்கவைப்பதற்கு நீங்கள் தயாராகமாட்டீர்களா? இந்நாளில் அல்லாஹு தஆலாவாலளிக்கப்படும் பாக்கியங்களை அனுபவிக்க முடியாமலும் ஏமாந்து போவீர்களா?

உலகத்திலுள்ள அழிந்து போகும் சில சக்திகளுக்குள் நடைபெற்றுவரும் யுத்தத்தைப் பற்றிய செய்திகளை அறிய விருப்பமுற்று ஓடித் திரிகிறவர்களே! அளவற்ற சக்தியை யுடைய அல்லாஹு தஆலாவுக்கும், கேவலமான மனிதர்களுக்கு மிடையில் பல நூற்றாண்டுகளாய் நடைபெற்றுவரும் மகா யுத்தத்தை யொட்டிய செய்தியையறிய முற்பட மாட்டீர்களா? இம்மகா யுத்தத்தால் ஏற்பட்டுவரும் அழிவு சாமான்யமானதன்று. அபாரமான இவ்வழிவுக்கு முன்னால் பிரான்ஸ் முதலிய தேசங்களில் நடைபெற்றுவரும் அழிவு பொருட் பண்ணத்தக்கதா? மனிதர்களுக்குள் நடை பெற்றுவரும் யுத்தத்தைப் பற்றிய செய்தியை யறிய பொறுமையற்று இராப் பகலாய் பத்திரிகையை நோட்டமிடுகின்றீர்கள். ஜெர்மன், பிரான்ஸ், ஜப்பான், ருஷியா, சீனா, அமெரிக்கா முதலியவர்களின் ஜெயம் அல்லது தோல்வியைப் பற்றிய செய்திகளின் உண்மையை அறிந்து உறுதிப் படுத்துவதற்காக படாத பாடெல்லாம் படுகிறீர்கள். ஆனால் உங்களுக்கும் உலகத்தை யழித்துவிடத்

தக்க சக்தியுமுள்ள உங்கள் ஆண்டவனுக்கும் இடையில் நடைபெற்று வரும் யுத்தத்தில் நிகழப்போகின்ற தோல்வி அல்லது சமாதானம் ஆகியவைகளைப்பற்றி நீங்கள் சிந்தித்ததுண்டா? ஆச்சரியமான சக்தியைக் கொண்டிருந்த கோடிக் கணக்கானவர்கள் உங்கள் ஆண்டவனோடு யுத்தம் செய்திருக்கின்றனர். ஆனால் அவர்களில் எவரும் இன்றுவரை ஜெயம் பெறவேயில்லையென்பதை நீங்கள் அறியீர்களா? எத்தகையோராயினும் அல்லாஹுதஆலாவோடு யுத்தம் செய்கிறவர்கள் முடிவில் பெரும் தோல்வியையுற்று சொல்லொணாத சிக்ஷையை யேற்றுக்கொள்வதே போல் நீங்களும் கேடிழைத்துக்கொள்ள விரும்புகிறீர்களா?

ஜெர்மனியின் பலத்தைக் கண்டு ஆச்சரிய முற்றவர்களே! முப்பது மணங்குள்ள குண்டுகளைப் பிரயோகஞ் செய்யும் பீரங்கியின் சக்தியைக்கண்டு நடுங்குகிறவர்களே! வானம் பூமி முதலிய சகலவற்றையும் படைத்த ஆண்டவனின் அபாரமான சக்தியில் உங்களுக்கு நம்பிக்கையில்லையா? அல்லாஹுதஆலாவின் சக்தியானது, ஆண்டவர்ப், நாமூர் முதலி சில கோட்டைகளை மட்டுமின்றி உலக முழுவதையும் இரத்தத்தில் மூழ்கவைத்து மண்ணோடு மண்ணாகச் செய்து கொண்டிருக்கிறது. பெரிய படைகளுக்குத் தோல்வியையுண்டு பண்ணிவிடும் மானுஷீக பலத்தைக்கண்டு இரவும் பகலும் புலம்பிக் கொண்டிருப்பவர்களே! ஓரே சமிக்கையால் வானம் பூமி முதலிய சகலவற்றையும் அழித்து நாசமாக்கி விடத்தக்க ஆச்சரிய சக்தியையுடைய "ஜப்பார்" "கஹ்ஹார்" ஆகிய அல்லாஹுதஆலாவை நீங்கள் ஏன் மறந்து விட்டீர்கள்?

உங்கள் மறைதியை முன்னிட்டு வானம் அழுதாலும், பூமி விசனங் கொண்டாடினாலும் பறவைகள் ஒப்பாரி வைத்துக் கூவினாலும் சமுத்திரத்திலுள்ள மச்சங்கள் துள்ளிக் கரையில் வீழ்ந்து விட்டாலுமென்ன? பின்னும் உங்களுக்கு நிகழ்ந்துவரும் கேடுகளைச் சிந்தித்து துக்கப்படாமலிருக்க முடியுமா? உங்களைப் பொருத்தவிசனம் முழு உலகத்தையும் சார்ந்ததல்லவா? (ஓர் வீட்டிலுள்ள தீபம் அணைந்து போனால் துக்கிப்பது இருள் சூழ்ந்த அவ்வீட்டிற்காகவே யன்றி அணைந்துபோன அத்தீபத்தை யொட்டி யல்ல.)

ஆயிரக்கணக்கான மைல்களுக்குக் கப்பாலுள்ள யுத்தகளத்தின் செய்தியை யறிய நீங்கள் பெரும் ஆவலைக் கொள்கின்றீர்கள். ஆனால் உங்கள் ஹிருதயத்தைப் பற்றியுள்ள செய்தியை அறிய முற்படுகின்றீர்களில்லை. (இச்செய்தி உங்களுக்கு வெளியிலுள்ளதல்ல. நிச்சய

மாய் உங்களுக்குள்ளேயே இருந்துவருவதாகும்.) பிறர் விழித்துக் கொண்டு முற்கூட்டிச் செய்யும் காரியங்களைச் செவியுற்று நீங்கள் அன்னவர்களைப் புகழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள். ஆனால் உங்கள் நற் காலத்தையும் மறைந்து கிடக்கும் அதிர்ஷ்டத்தையும் தேடிச்சென்று அவைகள் எங்கு ஒளித்துக்கொண்டிருக்கின்றன வென்பதைக் கவ னிக்கமாட்டீர்களா? ஆ! விசனத்திலும் விசனமே!! பெரும் விசனமே!!!

சமாதானம் அல்லது தோல்வி.

மேல்நாட்டினருக்குள்ளிருந்து வரும் சிக்கலான விவாதங்களை யொட்டியசெய்தியில் நீங்கள் கொண்டிருக்கும் நட்பின் முதிர்ச்சியால் உங்களையே மறந்துவிடாதீர்கள். உங்களுக்கும் பரிசுத்தமான உங்கள் நாயனுக்கு மிடையில் நடைபெற்றுவரும் யுத்தம் நிறுத்தப்பட்டு சமா தானமேற்படுவதற்கு வேண்டியவைகளைநீங்கள் சிந்திக்கவேண்டாமா? அல்லாஹுதஆலாவிடத்தில் சமாதானம் செய்துகொள்வீர்களானால் பிறகு உங்களை யெதிர்ப்பதற்கு எச்சக்தியினர்களாலும் முடியாது. ஜெயத்தையும் உயர்வையும் அல்லாஹுதஆலா உங்களுக்கு சன்மா னம் செய்துவிடுவானாகில்; பின்னர் உங்களை உலகிலுள்ள எச்சக்தியும் மிகைத்துக்கொள்ள சக்திபெற மாட்டாது. ஆனால் உங்களை அவன் (அல்லாஹுத ஆலா) தள்ளிவிட்டானாகில் உங்களை உலகில் எவர்தான் ஆதரிக்கக் கூடும். ஆகவே ஈமான் என்னும் உறுதியுள்ளவர்கள் அல் லாஹுதஆலாவின் மீதே நம்பிக்கை வைத்திருப்பார்கள்.

ஷைத்தானின் துர்க்கிருத்தியத்தால் தீவைக்கப்பட்டு உலகம் எரிந்துகொண்டும், ஒரு மானுஷீகவகுப்பை மற்றொரு மானுஷீக வகுப் பார் நாய்களைப்போல் கிழித்தெரிந்துகொண்டும், பாம்புகளைப்போல் கொத்திக்கொண்டு மிருக்கின்ற காலத்தில் கொடியவர்களை சிக்ஷித்துப் பழிக்குப்பழி வாங்குவதற்காக வழக்கம்போல் அல்லாஹுதஆலாவின் காரணக்கரங்கள் பயங்கரமான ஜோதியை வெளியிடுவது அவசிய மல்லவா? அல்லாஹுதஆலாவை அலட்சியஞ் செய்து தமதிஷ்டம் போல் திரிகின்றவர்களும் பெரும் பலமும் அதிக அகமும் படைத்த பொல்லாதவர்களும், காய்ந்த விறகு மடித்த இலை முதலியவைகளைப் போல் நரகமென்னும் தீயில் தள்ளப்பட்டு எரிக்கப்படுவார்களென் பதில் சந்தேகமுண்டா?

உலகத்தை யழிப்பதற்காகச் செய்யப்பட்டு வரும் தீச்செயல்கள் ஒருபுறமிருக்க நீங்கள், "அரபாத்" "மினா" என்றழைக்கப்படும் திறந்த வெளிகளை உற்றுப் பாருங்கள். இத்திறந்த வெளியில் வெற்

றுக்காலுடனும் சிரசில் ஒன்றுமில்லாமல் திறந்து வைத்திருக்கும் பெரிய கூட்டத்தினர்களையும் நோக்குங்கள். உலக வாழ்கையைக் கோறியாவது அழிந்துபோகும் சக்திகளினுத்திரவுக்குக் கட்டுப் பட்டாவது இவர்கள் கூடியிருக்கவில்லை. நிச்சயமாய் வெறுங்காலுடனும் தலை திறந்தவர்களாயும் நிற்கும் இக்கூட்டத்தார் அல்லாஹுதஆலாவின் உண்மையான கலிமாவுக்கு கௌரவமேற்படவும், ஒரே நாயனை வணங்குவதற்கான ஆவல் முதிர்ந்தும் இப்பாலைவனத்தில் சேகரமாகியிருக்கின்றனர். இப்பரிசுத்தமான கூட்டத்தார், தங்களின் தோள்களில் நெருப்பு, குண்டு ஆகியவைகளால் மனிதர்களைக் கொல்லும் ஆயுதங்களைத் தாங்கி நிற்கவில்லை. ஆனால் இவ்வுயர்தரமான கூட்டத்தார் அல்லாஹுதஆலாவின் அச்சத்தை முன்னிட்டு அவனையடைய வேண்டுமென்ற இச்சையை யுட் கொண்டவர்களாய்க்கூடியிருப்பவர்களேயாகும்.

இவர்கள் அல்லாஹுதஆலாவின் பிரியம் மேலிட்டு தங்கள் ஹிருதயங்களுள் அல்லாஹுதஆலாவின் பிரீதியினால் உண்டான தீயை எரித்துக் கொண்டிருப்பவர்களாகும். இந்நெருப்பிலிருந்து அவர்களறியாமலே புகைவெளியாகின்றது. பதறிப்பதறி அல்லாஹுதஆலாவின் சமுகத்தில் கண்ணீர் சொறிந்தவர்களாய் அவர்கள் செய்து கொள்ளும் விண்ணப்பங்களும்,' அவர்களின் நாவுகளிலிருந்து புறப்பட்டுக் கொண்டேயிருக்கின்ற துதிகளும் சாமான்யமானவையா?

உஸ்வயே இப்ராஹீமீ

இப்பரிசுத்தமான கூட்டத்தார் எந்த அரிய நிகழ்ச்சியின் ஞாபகார்த்தமாகக் கூடியிருக்கின்றார்கள் என்பதைக் கவனியுங்கள்? அல்லாஹுதஆலாவின் எந்த வாக்குறுதியை யெடுத்தோதி சதா புத்துயிரையளித்து வருவதற்காக இக்கூட்டத்தார் உலகத்திலுள்ள ஈமானையும் இஸ்லாமையும் அழைக்கின்றனர்.

இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமுக்குரித்தான நாடாகிய ஹிஜாசின் ஒவ்வொரு அணுவும் அக்காலத்தில் நடைபெற்ற அபாரமான தியாகத்தின் உண்மையைப் பஹிரங்கப்படுத்திக் கொண்டிருப்பதை பார்க்குந் திறமையுள்ள கண்களையும் கேட்கும் வல்லமையுள்ள செவிகளையும் உடையவர்கள் நன்கறிவார்கள். இப்பெரும் சம்பவம் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹுதஆலாவின்மீது கொண்டிருந்த நட்பு, இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமின் தியாகம் ஆகியவைகளின் ஆத்மார்த்திகமான சப்தம் வானத்தை அளாவி நின்கின்றது.

இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் அல்லாஹுதஆலாவிடத்தில் கொண்டிருந்த 'நேசத்தை' முன்னிட்டு அல்லாஹ் அல்லாதவை களின் மீதுள்ள அன்பை பலியிட்டதையும், ஹஜ்ரத் இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாம் தங்களின் உடல், உயிர் ஆகியவைகளை அர்ப்பணம் செய்ததுமாகிய மகா பெரும் தியாகமே இஸ்லாமின் அஸ்திவாரமும் உண்மையுமாகும். ஆனது பற்றியே இத்தியாகத்தை வருடந்தோறும் முஸ்லிம்களுக்கு ஞாபகார்த்த மாக்கப்பட்டிருக்கின்றது.

இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம், இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் ஆகியவர்களின் தியாகத்தை அவர்களை பின்பற்றிய சந்ததியார்களின் ஆத்மார்த்தீகமான தியாகத்தோடு ஏற்றுக்கொள்ளப்பட் டிருக்கிறது. ஆகவே இத்தியாகம் பெரும் சௌரவமுள்ளதாகும்.

" அல்லாஹுதஆலாவுக்குப் பணிதலென்னும் இஸ்லாமிய அர்ப்பணத்தை யொட்டிய ஆவல் இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) இஸ்மாயீல் (அலைஹிஸ்ஸலாம்) ஆகிய இருவருக்கும் மேலிட்டதோடு, குர்பானீ செய்யவேண்டுமென்ற இச்சை இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குப்பொங்கி அல்லாஹுதஆலாவின் பாதையில் அர்ப்பணம் செய்வதற்காக தம் அரும் புதல்வரை பூமியில் கிடைத்தி விட்டநேரத்தில், " ஓ இப்ராஹீமே! நிறுத்துங்கள் சந்தேகமின்றி உங்கள்சொர்ப்பனம் உண்மையெனக் காட்டி பூர்த்தியாக்கி விட்டீர்கள். இவ்வர்ப்பணத்திற்குக் கூலி சாசுவதமான மகாபெரும் தியாகம் (ஞாபகார்த்தமாக) நடந்து வரவேண்டும் என்று தீர்மானித்து இக்குர்பானியை ஏற்றுக்கொண்டோம். நன்றியறிதலுள்ள உண்மையாளர்களின் உயிர் அர்ப்பணம் தியாகம் ஆகியவைகளுக்கு இவ்வண்ணமே கூலி கொடுக்கின்றோம்" என்று இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கறிவித்தோம். (104.37 ஆயத்தின் வியாக்கியானம்).

ஹிஜாசின் பூமியிலுள்ள மினாவென்னும் திறந்தவெளியில் வருடந்தோறும் ஓடுகிற குர்பானியின் இரத்தமும் அதிக பிரியத்தோடு பெரும் தியாகத்தை முன்னிட்டு ஒவ்வொரு முஸ்லிமும் செய்கின்ற ஏற்பாடுகளும் உண்மையில் இஸ்லாமின் ஓர் உயர்தர உதாரணமாகவிருக்கின்றது. குர்பானீ ஷஹாதத்தின் இரத்தம் ஆகியவைகளின் பொருட்டினாலேயே ஈமான் தரிபட்டிருக்கக்கூடும் என்பதை வருடந்தோறும் நடைபெற்று வருகிற இந்தக் காரியம் எடுத்தோதி வருகின்றது. ஆகவே அல்லாஹுதஆலாவை யடைவது, அவனுக்காக அர்ப்

பணமாவது ஆகிய அந்தஸ்தைப் பெருதவரையில் எவரும் மூமிஞக முஸ்லிமாகவுமிருக்க முடியாது.

மீதாகே இப்ராஹீம்.

அல்லாஹுதஆலா இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை, இஸ்லாமிய தியாகத்தின் உண்மை, இயற்கையான மத அறிவு ஆகியவைகளை யொட்டிய சில பரீக்ஷைகளை செய்தபோது இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அப்பரீக்ஷையில் சித்தியடைந்தார்கள். அஃதாவது தன் அருமைப் புதல்வரின் கழுத்தில் கத்தியை வைத்து விட்டார்கள். சந்திரன், சூரியன் முதலிய அழிந்து போகும் சகலவைகளையும் விட்டு பாரா முகமாகி அல்லாஹுத ஆலாவின் இயற்கையான மார்க்கத்தை முன்னேக்கிநின்ற போழ்து உங்களுக்கு மனிதர்களின் இமாமத்து, கிலாபத்து ஆகியவைகள் அளிக்கப்படுகின்றன; என்று அல்லாஹுதஆலா அறிவித்த சந்தோஷச் செய்தியை செவியுற்ற இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "என் சந்ததியாருக்குமா?" என வினவிஞர்கள். அதற்கு "ஆம். ஆனல் யார் நம்முடையவாக் குறுதியை அலட்சியம் செய்து அநியாயமாய் முறித்து விட்டார்களோ அவர்களுக்கில்லை." என அல்லாஹுத ஆலா விடையளித்தான்.

"யௌமுல் ஹஜ்ஜு" என்னும் ஹஜ்ஜின் தினத்தன்று சூரியோதயம், உண்மையில் முஸ்லிம்களின் கிலாபத்தைப் பற்றியும் இமாமத்தைப் பற்றியும் அல்லாஹுத ஆலா இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குச் செய்து கொடுத்த வாக்குறுதியை ஞாபகம் மூட்டுவதாகவேயிருக்கின்றது.

அல்லாஹுத ஆலா தன் வாக்குறுதியின் படி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம். இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் ஆகியவர்களின் தேகம் ஆத்மார்த்திகம் ஆகிய இருவகை சந்ததிகளுக்கும் கிலாபத் தென்னும் கௌரவத்தை யளித்தான். அல்லாஹுத ஆலா தன் வாக்குறுதியின் படி கிலாபத்தையும் இமாமத்தையும் முதன் முதலாகா பனீஇஸ்ராயீல்களுக் களித்தான். ஜெரூஸலமின் பெரிய ஆலயமும், ஷாம் தேசத்தின் செழுமையும் அல்லாஹுத ஆலாவை அடி பணிந்து விசுவாசிக்காது போன பின் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம். அவர்களை குர்பானீ செய்த அரப் தேசத்து "பத்ஹா" "எத்ரப்" ஆகிய ஓடையுள்ள பாலை வனத்தை அல்லாஹுத ஆலாவின் பாக்கியங்களாகிய கிலாபத்தும் இமாமத்தும் தங்களுக்கு இல்லமாக்கிக் கொண்டன.

"உங்களின் நடவடிக்கை எவ்வாறிருக்கிற தென்று பரீக்ஷிப்ப தற்காக அவர் (பனீஇஸ்ராயீல்)களுக்குப் பின் உங் (முஸ்லிம்) களுக்கு பூமியின் கிலாபத்தை யளித்தோம்" (அல் குர்ஆன்)

இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் மார்க்கத்தைப் பின் பற்றியவர்களே! இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் உறவினர் களே! அல்லாஹுதஆலா உங்களுக்கு "கிலாபத்" "இமாமத்" ஆகிய பதவிகளை யளித்துத் தன்வாக்குறுதியை நிறைவேற்றி விட் டான். ஆயினும் அல்லாஹுதஆலாவின் வாக்குறுதியை அலட்சியஞ் செய்து கெடுத்துவிடும், அநியாயக்காரர்களுக்கு "இமாமத்" "கிலா பத்" முதலிய பதவிகள் கிடையாவென்று அல்லாஹுதஆலா செய்தி ருந்த எச்சரிக்கையின்படி பிறகு அப்பதவிகள் உங்களிடமிருந்து பரிக் கப்பட்டுப் போன துக்ககரமான ஸ்திதியையும் பார்த்தாகிவிட்டது.

ஜனங்கள் பயப்படவும் அல்லது ஹிருதயங்களுள் உணர்ச்சியுண் டாகவும் நம் எச்சரிக்கைகளையும் அதனுல் விளையும் பலாபலனையும் அறிவித்திருக்கிறோம். (அல் குர்ஆன்-113-20)

யௌமுல்ஹஜ்ஜு என்னும் இவ்ஹஜ்ஜின் தினத்தன்று அல்லா ஹுதஆலாவின் வாக்குறுதி சம்பந்தமாய் ஞாபகமூட்டுவதற்கு ஒவ் வொரு வருடமும் பாரானின் மலையின் உச்சியிலும் ரஹ்மத் என்னும் மலையின் ஓடைகளிலும் சூரியன் உதயமாகின்றது. அன்றியும் இந்த ஹிஜாசின் பூமியிலிருந்து செய்துகொண்ட விண்ணப்பத்தின் மூலமா கவே முஸ்லிம்களுக்கு "கிலாபத்" "இமாமத்" ஆகிய பதவிகள் கிடைத்தன வென்பதை ஞாபக மூட்டுவதற்காகவும் யௌமுல் ஹஜ்ஜு வருடந்தோறும் வந்து கொண்டிருக்கின்றது.

அல்லாஹுதஆலாவின் கிருபையும் நன்கொடையும் நிறைந்துள்ள நல்ல சகுனமாகிய யௌமுல்ஹஜ்ஜு இன்று உங்கள் முன் வந்து விட் டது. ஆதலின் உலகத்தில் நடைபெறும் கொடியகருமங்களையும் அமை தியின்மையையும் அல்லாஹுதஆலாவின் கோபாக்கினியானது மூடிக் கொண்ட இந்நாளில் அவனின் மறைந்து கிடைக்கும் கிருபை இரக்கம் க்ஷேமம் ஆகியவைகளைத் தேடிப் பிடிப்பதற்காக வெளியில் புறப்படுங்கள். அல்லாஹுதஆலாவுக்கும் மனிதர்களுக்கு மிடை யில் நடைபெற்றிருக்கும் வாக்குறுதியை இறுதியாக ஞாபகப்படுத்திக் கொள்ளும் நற்சகுனம் யௌமுல் ஹஜ்ஜல்லவா? சண்டை, சமா தானம், மாறுதல், உலகப்புரட்சி முதலியவைகளைத் தெரிந்துகொள் ளுவதற்கு நீங்கள் பெரும் கவலை கொள்ளுகிறீர்கள். ஆனல் உலகத்

தின் பெரும் மாறுதலுக்குக் காரணமாக உங்களுக்குள்ளே ஏற்பட வேண்டிய மாறுதலைப்பற்றி நீங்கள் சிந்திக்கமாட்டீர்களா?

உலகத்தில் பெரும் மாறுதலை யுண்டுபண்ணத்தக்க மாறுதல் உங்களுக்குள் ஏற்படவேண்டுமாயின் மேற்கூறப் பட்டுள்ள இஸ்லாமிய அர்ப்பணம் உங்கள் ஹிருதயத்திலும் ஆத்மாவிலும் குடிகொள்ளச் செய்வது முக்கிய நிபந்தனையாகும். எப்பெரும் தியாகத்தின் ஞாபகார்த்தமாக உங்கள் கரங்களால் வருடந்தோறும் வெளிப்படையான குர்பானியைச் செய்து இரத்தத்தை யோட்டுகின்றீர்களோ? அத்தியாகத்தை யொட்டிய உண்மையை உங்கள் ஆத்மாக்களும் உணரும்படிச் செய்யுங்கள். நீங்கள் செய்யும் வெளிப்படையான குர்பானியின் ஊடேயே அல்லாஹுதஆலாவின் சமூகத்தில் தலை சோர்ந்தவர்களாய் விழுந்து விடுங்கள்.

உங்கள் ஜீவனத்தை யொட்டிச் செய்யப்படும் எல்லா காரியங்களுள்ளும் அல்லாஹுதஆலாவின் பரிசுத்தமான உத்தரவுகளை இச்சித்து அடிபணியக் கூடிய ஜீவனென்னும் தன்மையை யுண்டுபண்ணிக் கொள்ளுங்கள். அல்லாஹுதஆலாவின் சமூகத்தில் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமெனக் கோறி கண்ணீர் சொரிந்து கெஞ்சினவர்களாய் நில்லுங்கள். உங்கள் ஆதரவற்ற நிலைமையில் பதஷ்ட மேற்பட்டவர்களாய் அழுங்கள். அவன் சமூகத்தில் குற்றவாளிகளைப் போல் மண்ணில் வீழ்ந்து புரளுங்கள். உங்கள் உயிர், உடல் சொத்து சுதந்திரம் மனைவி மக்கள் முதலிய உங்களுக்குவப்பான சகலவற்றையும் அல்லாஹுதஆலாவுக்காகவும் அவனின் மார்க்கத்திற்காகவும் அவனுடைய பரிசுத்தமான கலிமாவுக்காகவும் அவனுடைய உண்மை, நீதி முதலியவைகளுக்காவும் தியாகம் செய்து விடுங்கள். இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் விண்ணப்பத்தை யேற்றுக்கொண்ட அல்லாஹுதஆலா இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் தியாகத்தை அங்கீகரித்துக்கொண்ட அல்லாஹுதஆலா, வேளாண்மையில்லாத (ஹிஜாஸ் என்னும்) பாலைவனத்தை மகா பெரும் நபித்துவத்தின் உதயகிரியாகவும் அஸ்தகிரியாகவும், முன்னோர் பின்னோர் கூடும் நடுநாயக ஸ்தலமாகவும் எற்படுத்திய அல்லாஹுதஆலா உங்கள் பாவங் காரணமாய் உங்களை ஒதுக்கித் தள்ளினாலும் இன்று உங்களின் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளவும் ஆதரிக்கவும் சக்தி பெற்றிருக்கின்றான்.

ஆகவே தௌபாச் செய்யுங்கள். உங்கள் பரிசுத்தமான உறுதியும் நம்பிக்கையும் புத்துயிரடையும்படி முயலுங்கள். துஆச்

செய்யுங்கள். ஹிஜாஸின் நாயனைக் கூவியழையுங்கள். இழந்து போன உங்கள் சுதந்திரங்கள் மீண்டும் உங்களுக்குக் கிடைப்பதற்காகவும் உங்கள் விசனம் தீருவதற்காகவும், அல்லாஹுத ஆலாவின் வாக் குறுதியைத் தவறிவிட்ட அநியாயக்கார கோஷ்டியினின்றும் நீங்கி உத்தமமான கோஷ்டியைச் சார்ந்து விடுங்கள்.

நீங்கள் அல்லாஹுத ஆலாவின் பேரிலும் கூலி கொடுக்கும் கடைசி நாளின் பேரிலும் "ஈமான்" உள்ளவர்களாயின் இவ்வுபதேசம் உங்களுக்கு நன்மையைப் பயக்கும்.

இஸ்லாமும் சுயேச்சையும்

இஸ்லாமியராஜீய முறை (2)

(மௌலானா அபுல்கலாம் ஆஜாத் எழுதியது.)

"ஓ! உலகத்தவர்களே! அல்லாஹுத ஆலாவைத்தவிர வேறு யெவரையும் வணங்குவதில்லை; அவனுக்கு இணைவைப்பதில்லை. அவனன்றி மற்ற எவரையும் தமக்கு ஆண்டவனாகவோ தலைவனாகவோ ஏற்படுத்திக் கொள்வதில்லை யென்னும் முக்கியமான விஷயத்தை நம் அறிவு ஒத்துக்கொண்டு இருப்பதுபோல் செய்கையிலும் ஏற்றுக் கொள்ளுவோம் வாருங்கள்" என்று மக்கமா நகரின் கண்ணுள்ள அபூ குபைஸ் மலையினுச் சத்திலிருந்து கிளம்பிய சப்தம் உலகமென்னும் கோபுரத்தின் ஒவ்வொரு பாகத்திலும் பெரிய அதிர்ச்சியை யுண்டு பண்ணிவிட்டது. ஆத்மார்த்திகதத்துவம் நிறைந்த இச்சப்தத்தின் மூலமாய் முஸ்லிம்கள் அபாரமான சக்தியும் ஆச்சரியமான முன் னேற்றமுமடைந்தனர்.

கொடியவர்கள் தங்களை ஆண்டவனென மதித்து உண்டு பண்ணிய விக்கிரஹங்களையும் மனிதனின் அகங்காரத்தால் உற்பத்தியாயிருந்த விக்கிரஹங்களையும் இவ்வோரே சப்தம் நாசமாக்கிவிட்டது. சக்ரவர்த்திகளின் இரகசியமான தந்திரங்களும் சூழ்ச்சிகளும் ஆச்சரியமான சக்தியும் பெருமையும் ஒழிந்துபோயின. அரசர்கள், பிரஜைகள் முதலிய எல்லோரும் சம அந்தஸ்தையுடையவர்களென்ற நம்பிக்கை பிறந்துவிட்டது. பைத்துல்மால் அல்லது தேசநிதியில் ஒவ்வொருவரும் சரியான உரிமையுடையவர்களென தீர்மானமாயிற்று.

அரேபியாவில் அப்போழ்து தோன்றின அரசர் தங்களுக்கென சொந்த மாடமாளிகை கோட்டை முதலிய கட்டடங்களைத்

தயாரித்துக் கொள்ளவில்லை. அவ்வரசர் தமக்கென உயர்தர மான விரிப்புகளை விரிக்கச்செய்யவில்லை. தங்கம் வெள்ளியினால் செய் யப்பட்ட ஆசனங்களால் தங்கள் தர்பாரை அலங்கரிக்கவில்லை. அவ் வரசர் தங்களை மற்ற மனிதர்களைக்காட்டிலும் உயர்வானவரென்று கூறவில்லை. "யாம் உங்களைப்போன்ற சாதாரண மனிதரேயாகும்" என்று அவ்வரசர் பகிரங்கமாய் அறிவித்துள்ளார்கள்.

அரேபியாவுக்குச் சுற்றியுள்ள ஏமன், எமாமா, கஸ்ஸான், ஹீரா, பஹ்ரைன் முதலியதேசங்கள் இஸ்லாம் தோன்றுவதற்குமுன் அநாகரீகமென்னும் ஆழியில் ஆழ்ந்து கிடந்தன. அத்தேசங்களிலி ருந்த ஒவ்வொரு வகுப்பாரும் தனித்தனியே ஒவ்வொரு ஆண்டவனி ருப்பதாய் அவர்கள் கருதியிருந்ததைப் போலவே அவர்களுக்கு தனித்தனியே (ஒவ்வொரு வகுப்பாருக்கும்) ஒவ்வொரு தலைவரும் இருந்து வந்தார்கள். சமூகங்களுள் நடைபெற்று வந்த வெட்டு, குத்து, சண்டை சச்சரவு முதலியவைகளால் தேச முழுதும் யுத்த களமாக விருந்துவந்தது. அரப்தேசத்தின் ஒவ்வொரு பாகத்திலும் சமாதான பங்கமும் நம்பிக்கையின்மையுமே மலிந்து கிடந்தன. ஒரு வகுப்பாரின் சொத்து சுதந்திரங்களை அபகரித்துக்கொள்ளுவதே மற்றொரு வகுப்பாரின் கௌரவமான ஜீவனமாக விருந்துவந்தது. பிறர் பொருளை சூரையாடும் இவ் அருவருப்பான செய்கைகளைப் புகழ்ந்து அவ்வவ் வகுப்பைச் சேர்ந்த கவிராயர்கள் கவிகளை இயற்றி யும் வந்தனர். சுருங்கச் சொல்லுமிடத்து அரப்தேச மென்னும் வரண்ட பாலை வனமுழுதும் மனிதர்களின் உதிரத்தால் நனைக்கப் பட்டு வந்தது.

இவ்வபாயகரமான காலத்தில் திடீரென அல்லாஹுத் ஆலா வின் ஆட்சி உதயமாயிற்று. இவ்வாட்சியைத் தாங்கி நின்ற நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லமவர்கள் வெளியிட்ட அறிக்கை யாவது :—

"ஓ! ஆதம் (அலைஹிஸ்ஸலாமவர்கள்) உடையமக்களே! (ஹஜ்ஜுடைய) இம்மாதம், (மக்கா வென்னும்) இந்நகரம், இன்றை யதினம் ஆகியவைகளின் மரியாதை இன்று உறுதி செய்யப் படுவதைப் போல், உயிர்பொருள் ஆகியவைகளின் மரியாதை யும் இன்று உறுதி செய்யப்படுவதை யொட்டி நீங்கள் எச்சரிக்கை யாயிருந்து கொள்ளுங்கள். இஸ்லாம் பிரகாசிப்பதற்கு முன்னிருந்த மடமையின் காலத்தில் நிகழ்ந்துவந்த அருவருப்பான காரியங்கள் யாவும் இன்று என் பாதத்திற்குக் கீழே மிதிக்கப்பட்டு விட்டதையும்

எச்சரிக்கப் படுகின்றது. மடமை நிறைந்த அக்காலத்தில் இரத்த வெறிபிடித்து நடந்த கொலைபாதகச் செய்கைகளையும் அதற்காகச் செய்யப்பட்டு வந்த ஏற்பாடுகளையும், இன்று முதல் மறந்துவிட வேண்டும். ஆனதுபற்றியே என் சிறிய தந்தையின் புத்திரர்'' இப்னு ரபீ ஆபின் ஹாரித்'' கொலையுண்டதை யொட்டிப் பழிக்குப்பழி வாங்க வேண்டியதை முதன் முதலாக இழந்து மறந்துவிடுகின்றேன்.'' என்பதே.

இவ்விளம்பரமானது அடக்க மற்றிருந்த அரப்தேசத் தில்பெரும் அமைதியை யேற்படுத்தி அத்தேச முழுதும் சமா தானத்தை நிலவச்செய்து விட்டது.

“ அரேபியாவின் சமாதானமின்மைக் கண்டு நடுங்கவேண்டாம். ஒரு விருத்தாப்பிய மாது தன்கையில் தங்கத்தை ஏந்தினவளாய் ஒரு எல்லையிலிருந்து மற்றொரு எல்லைக்கு அச்சமின்றி செல்லு வாள். அவளை ஏறிட்டுப் பார்ப்பவனு மிருக்கமாட்டான் ” என்று “தை” என்னும் ஒரு கிறிஸ்தவ அரசகுமாரனை நோக்கி சத்திய அர சாங்கத்தின் ஸ்தாபகர் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர் கள் அறிவுத்துள்ளார்கள். நாயகமவர்கள் அறிவித்தவாறு நன்னிலை மையை யடைந்த காக்ஷியைக் கண்டு உலகம் மகிழ் வெய்தியது.

ஆட்சிமுறை ஸ்தாபனம் அல்லது சீர்திருத்தம்

இஸ்லாம் ஸ்தாபித்த அரசாங்கத்தின் ஒழுங்கு முறைகள் பெரும் ஆச்சரியத்திற் குரியனவாகவிருந்தன. ஏனெனில்? இஸ்லா மிய அரசாங்கம் ஏற்படுத்திய முறைகள் அப்போழ்து உலகத்திலிருந்து வந்த எந்த அரசாங்கத்திலும் காணக் கூடாதனவாக விருந்தன. அவ் வரசாங்கமானது ஜனநாயகதத்துவ ஆட்சியின் அஸ்திவாரமிட்டு அதற்கு வேண்டிய எல்லா சட்டதிட்டங்களையும் உண்டு பண்ணிவிட் டது. பொதுமக்களின் உரிமை இன்னின்னவையென விளக்கிய தோடு குற்றங்களைப் பாகுபாடு செய்து அவையவைகளுக்குப் புரியவேண் டிய சிட்சைகளையும் வரையறுத்துவிட்டது. தேசம் பொருள் நிர்வா கம் முதலியவைகள் சம்மந்தமான சட்டதிட்டங்களையும் இயற்றிற்று. நியாயம் சத்தியம் முதலியவைகளைக் கற்பித்து வேற்றுமை தாக்ஷண் யம் முதலியவைகளை ஒதுக்கி குறிப்பிட்ட நபர்களின் நியாயமற்ற உயர்வையும் ஏதேச்சாதிகார ஆட்சியையும் வேரோடு கெல்லிவிட் டது.

ஜனநாயகதத்துவம் அல்லது குடியரசு.

அரசாங்கங்களுள் உத்தமமானவைகளுக்கு வேண்டிய அம்சங்க ளென்னவென்று கேட்கப்படும்போது 18-வது நூற்றாண்டில் நிகழ்ந்த பிரான்சுதேசத்துப் புரட்சியால் ஏற்பட்ட குடியரசுமுறையே சிலாகிக் கத் தக்கதெனை விடையளிக்கப் படுகின்றது.

அஃது வருமாறு :—

(1) அரசாங்கம் அவ்வவ்தேசங்களின் பொது உடைமையாகும். இதில் எந்த நபருக்கும் குடும்பத்திற்கும் குறிப்பான உரிமையல்லது ஆதிக்கம் கிடையாது.

(2) சட்டம் உரிமை முதலிய ஒவ்வொரு விஷயத்திலும் தேசத் தின் சகல ஜனங்களும் சமஅந்தஸ்துடையவர்களே யாகும்.

(3) (பிரசிடெண்டு) தேசத்தின் தலைவர் தேச ஜனங்களின் பொது தேறுதல் மூலமாய்த் தெரிந்தெடுக்கப்படவேண்டும். தேச ஜனங்களைக் காட்டிலும் தேசத்தின் தலைவருக்கு எவ்வகையிலும் அதிகசுதந்திர மிருக்கக் கூடாது. (இஸ்லாமிய சம்பிரதாயப்படி இத் தலையவர் "இமாம்" அல்லது "கலீபா" வென்றழைக்கப் படு கின்றார்.

(4) சட்ட நிர்வாகத்தை யொட்டிய காரியங்களும் தேச சம் மந்தமான எல்லா நடவடிக்கைகளும் தேசத்தின் முக்கியஸ்தர்களு டைய ஆலோசனைப் படியே முற்றுப்பெற வேண்டும்.

(5) தேசத்தின் பொக்கிஷம் அத்தேச மக்களின் பொதுவான சொத்தாகும். ஆகவே தேசத்திலுள்ள முக்கியஸ்தர்களினிடம் யோசனை கேட்காமல் அப்பொக்கிஷத்தைச் செலவிட தலைவருக்கு உரிமை கிடையாது.

இஸ்லாமிய அரசாங்கம்.

அரசாங்கம் தேச ஜனங்களுக்குடையதேயன்றி குறிப்பாக அது ஒரு நபருக்காவது அல்லது குடும்பத்திற்காவது சேர்ந்த மானதல்ல.

இவ்விவாதம் விவாதங்களுள் முக்கியமானதாயும் ஜன நாயகதத்து வத்தின் அடிப்படையைக் கொண்டதாகவு மிருக்கின்றது. நாம் ஆரம் பித்திருக்கும் விவாதம் உண்மையில் ஜனநாயகதத்துவ மென்னும் வித்திலிருந்து உற்பத்தியான விருக்ஷமும் இத்தத்துவத்தை யொட்டி யலக்ஷியமுமாகும். அரசாங்கம் பொது மக்களுக் குறித்தான தென்

றும், குறிப்பிட்ட எந்த நபருக்காவது சொந்தமானதல்ல வென்றும் இஸ்லாம் கூறிவருவதாகவுள்ள தாவாவை ருஜுப்பிப்பதற்கு இஸ்லாம் தானே பகரும் அத்தாக்ஷியை சகலரு மறிவர்.

அஃதாவது:—" ஓ! நபியே! (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அரசாங்க விஷயத்தில் முஸ்லிம்களிடம் ஆலோசித்துக் கொள்ளுங்கள்" என்றும் மற்றோரிடத்தில் இஸ்லாமிய அரசாங்கத்தைப் புகழ்ந்து "அவர்களின் அரசாங்கம் சம ஆலோசனையை யொட்டியதாகும்" (3-6-42) என்றும் நம் திருமறையில் அறிவிக்கப்படுகிறது. இவ்விரண்டு ஆயத்துகளுள் முதலாவது ஆயத்தில் அரசாங்கம் பொது மக்களின் ஆலோசனையைப் பெறவேண்டுமென உத்திரவு செய்யப்பட்டும் இரண்டாவது ஆயத்தில் இவ்வுத்திரவின்படி இஸ்லாமிய அரசாங்கம் நடைபெற்று வந்ததை மெய்ப்பிக்கப் பட்டுமிருக்கின்றது. இவ்விரண்டு ஆயத்துகளின் மூலமாய் நாம் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்களாவன:—

(1) இஸ்லாமிய அரசாங்கம், பொதுமக்களின் ஆலோசனையைக் கேட்கவேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டதாகும்.

(2) இஸ்லாமிய அரசாங்கம் எவருக்கும் சொந்தமான தல்ல இது முஸ்லிம் பொதுமக்களுக்கு சமபாத்திய முள்ளதாகும்.

இவ்விரண்டு அம்சங்களையும் அடிப்படையாய்க் கொண்டே இஸ்லாமின் ஆரம்பகாலத்து முஸ்லிம்கள் ஆக்ஷிபுரிந்து வந்தார்கள் என்னும் உண்மையை சரித்திரத்தின் உதவியில்லாமலேயே அவர்களின் (முஸ்லிம்களின்) அரசாங்கம் சமஆலோசனையை யொட்டியதாகும் என்று குர்ஆஷரீப் கூறுவதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளுகிறோம்.

குர் ஆன்ஷரீபின் இவ்விரண்டு ஆயத்துகளை யடிப்படையாய்க் கொண்ட நம்தாவாவை நிரூபிக்க நமக்கு வேறு அத்தாக்ஷி வேண்டுவதில்லை. ஆனால் ஆரம்பகாலத்து நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டவேண்டிய அவசியமுமிருக்கின்றது. ஏனெனில் இதன் மூலமாய் முற்காலத்து இஸ்லாமிய அரசாங்கத்தின் அனுஷ்டான முறைகளை எவரும் நன்குணரக்கூடும்.

(1) நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களும் குலபாயெராஷிதீன்களும் தங்களின் நண்பர்களையாவது புத்திரர்களையாவது தங்களின் பிரதிநிதிகளாக நியமிக்கவில்லை.

(2) நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களும் குலபாயெராஷிதீன்களும் முக்கியமான எல்லாகாரியங்களிலும் "முஹாஜிரீன்," "அன்ஸார்" ஆகிய இருவகுப்பார்களிடத்தில் குறிப்பாகவும்

மற்ற முஸ்லிம்களிடத்தில் பொதுவாகவும் ஆலோசனை கேட்பவர்களாகவே யிருந்து வந்தார்கள்.

(3) முஸ்லிம்களின் பொதுத்தேறுதல் ஆலோசனை ஆகியவைகளின் மூலமாகவே கலீபாக்கள் நியமனமானார்கள்.

(4) பைதுதுல்மால் என்னும் நிதி முஸ்லிம்களின் பொதுவான பாத்தியத்திற்குட்பட்டிருந்தது. அதை எவரும் தமதிஷ்டம் போல் செலவிடவில்லை. ஆனது பற்றியே இதற்கு "பைத்தெமாலுல் முஸ்லிமீன்" என்ற நாமம் சூட்டப்பட்டிருந்தது.

இஸ்லாமிய அரசாங்கம் எதேச்சாதிகார முறையை அடிப்படையாய்க் கொண்டதாகவிருந்திருக்குமாயின் மேற்கூறப்பட்டுள்ள அரிய விஷயங்கள் இஸ்லாமிய அரசாங்கத்தில் இருந்து வர நியாயமில்லை. இஸ்லாமியஅரசாங்கத்தை யொட்டி "குர்ஆன்ஷரீப் பகரும் ஆயத்துகள் மட்டுமின்றி பொதுக்கூட்டத்தில் கலீபாக்களைத் தெரிந்தெடுப்பது, கலீபாக்களின் உத்தரவு நடவடிக்கை முதலியவைகளை யொட்டி பொதுமக்கள் தைரியமாயும் சுயேச்சையாயும் விவாதிப்பது, அரசாங்க சம்மந்தமான முக்கிய விஷயங்களைப் பற்றி தக்கவர்களிடத்திலும் கற்றோரிடத்திலும் ஆலோசனை கேட்பது, குறிப்பிட்ட நபர் "பைத்துல் மாலை" தமதிஷ்டம் போல் செலவு செய்க் கூடாதென்று மறுத்து இது பொதுமக்களின் நிதியெனத் தீர்மானிக்கப்பட்டிருப்பது முதலியவைகள் ஜனநாயக தத்துவ ஆக்ஷியையே அரசாங்கமென்று இஸ்லாம் அங்கீகரிக்கிறதென்றும் எதேச்சாதிகாரத்தை இஸ்லாம் ஏற்றுக்கொள்ளவில்லை யென்றும் ஒப்புக்கொள்ள போதியன வல்லவா?

மேஜர் ஆயிஷாகானமின் வீரம்

"வதன்" என்னும் பத்திரிகையின் ஆலயத்தைப் பார்வையிட மேஜர் ஆயிஷாகனம் வந்திருந்தபோது மேஜர் அவர்களை தமது யுத்த ஊழியத்தைப் பற்றிய வரலாற்றைத் தெரிவிக்கவேண்டுமெனக் கேட்கப்பட்டதனன்மேல் மேஜர் ஆயிஷாகனம் கூறியதாவது:—

"நான் ஹிஜ்ரி 1314-ல் ஜனனமானேன். நான் ஜனனமான பின்பு என் பெற்றோர் திமிஷ்கைவிட்டு ஸமர்னுவுக்கு ஏகினார்கள். நான் ஆறுவது பிராயத்தை யடைந்தபோழ்து என் தந்தையும், பத்தாம் ஆண்டை யணுகிய போழ்து என்னன்னையும் காலகதியடைந்தனர். எனக்கு 12-வயதானதும் மேஜர் முஸ்தபாநூரீ என்னும் தளக்கர்த்தருக்கு விவாகஞ் செய்யப்பட்டேன்.

19-வது வயதில் என் கணவரையு மிழந்தேன். என் கணவர் மரணமடைந்தபோது 2 வயதுள்ள பெண்குழந்தை யொன்றிருந்தது. என் ஆதரவற்ற இந்நிலையைப்பற்றிச் சற்று சிந்தித்து முடிவில் சேனையிற் சேர்ந்து என்கணவன் வழிச்சென்று உயிரைத் தியாகம் செய்வதென நிச்சயித்தேன். ஆகவே தமியேனை சைன்னியத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென விண்ணப்பித்துக் கொண்டேன். ஆனால் என் விண்ணப்பம் அங்கீகரிக்கப்படவில்லை. என் கணவர் எனக்குச் செய்துகொடுத்திருந்த இரு காதணிகளையும் 60 பவுனுக்கு விற்று 50 பவுனுக்கு ஓர் ஜெர்மன் துப்பாக்கி வாங்கிக்கொண்டு சைன்னியஉடை தரித்துச் சென்று இந்தக்ஷணமே என்னை யுத்தகளத்திற்கனுப்பவேண்டுமென விஞ்ஞாபித்துக் கொண்டேன். யான் கோரியவாறே "சனுக்கு" என்னும் கோட்டைக்கப்பால் நடந்துகொண்டிருந்த யுத்தகளத்திற்கு என்னை அனுப்பிவைத்தார்கள். நான் அங்கிருந்த படைத்தலைவரின் உத்தரவுக்குட்பட்டுச்செய்த தீபரமான ஊழியத்தை முன்னிட்டு எனக்கு "கார் போரல்" என்னும் பதவியளிக்கப்பட்டது. யுத்த நிறுத்த மேற்பட்ட பிறகு ஸ்மர்னாவுக்கு வந்தேன். பிறகு கிரேக்கரின் அட்டூழிய மேற்பட்டதும் "ஆபீதீன்" என்னுமிடஞ் சென்று படைக்கு ஆள் சேர்த்தேன். 3000 சைனியங்களோடு யுத்தத்தில் ஈடுபட்டேன். நான் சில சிப்பாய்களோடு ஒரு கிரேக்கப்படையை யெதிர்த்துப் போர் புரிந்து ஒரு கிரேக்கனையும் கைது செய்தேன். ஆகவே என் ஊழியத்தை மெச்சி என்னைக் "காப்டன்" என்னும் பதவிக்குயர்த்தப்பட்டது. பின்னர் சக்காரியா யுத்தத்தை முன்னிட்டு அங்கோரா அரசாங்கத்தார் எனக்கு மேஜர் என்னும் பதவியை யளித்தார்கள்."

ஆயிஷா கானம் அவர்களை நோக்கி "விவாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்னும் அபிப்பிராயம் தங்களுக்குண்டா?" என்று கேட்கப்பட்டபோழ்து "விவாகம் செய்துகொள்ள நான் இஷ்டப்படவில்லை. ஆனால் யுத்தகளத்தில் வாளாயுதத்தை விவாகஞ் செய்துகொள்ளுவேன்" என்று பதிலளித்தார்கள்.

ஆயிஷா கானம், முஸ்தபா கமால் பாஷா அவர்களுக்கு எழுதிய ஒரு விண்ணப்பத்தின் சாரம்:—

"நான் குதிரைப் படையைச் சேர்ந்த 56-வது ரெஜிமெண்டின் கோல்ரி மேஜராகிய மாதராகும். துரதிர்ஷ்டமான எந்நாட்டைக் காக்கும்பொருட்டு என் ஈரல் துண்டாகிய பாலகனை ஆண்டவனின் பாதுகாவலில்விட்டு யுத்தகளம் சென்று வேலை செய்வது என் கடமை

யெனத் தீர்மானித்தேன். யுத்தகளத்தில் காயமடைந்தேன். இரத்தமும் சிந்தினேன். எறும்பு எத்தன்மைய ஜந்து? அதுவும் தன் சக்திக்கேற்றவாறு வேலை செய்வதேபோல் நானும் என் சக்திக்கேற்ற கடமையைச் செய்தேன். அரசாங்கம் என் ஊழியத்தை மெச்சி இப்பதவியையுமளித்திருக்கின்றது..தலைநகரை அங்கோராவுக்கு மாற்றியது சரியல்லவென்று அபிப்பிராயப்படுகிறேன்'' என்பதே.

உஸ்வயெஹஸனு

(182-து பக்கத் தொடர்ச்சி)

(மௌலானு அபுல்கலாம் ஆஜாத் எழுதியது.)

அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் செய்த அரிய பிரசங்கத்தைச் செவியுற்றிருந்த சஹாபாக்கள் அதன் இறுதியில் கூறப்பட்ட குர்ஆன் ஷரீபின் ஆயத்து அப்பொழுதுதான் இரங்கியது போன்ற உணர்ச்சியை யுண்டுபண்ணிற்று, என பகர்ந்தார்கள். அபூபக்கர் சித்தீக்ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் நாவிலிருந்து அச்சந்தர்ப்பத்திற் கேற்ற நல்ல வசனங்கள் வெளியானதால் அவை ஒவ்வொரு மனிதனுடைய ஹிருதயங்களிலும் பதிந்துவிட்டதோடு, அன்னவர்கள் அவ்வசனங்களை அடுத்தடுத்து மொழிந்தனர்.

அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் காண்பித்த தைரியம் அடக்கம் பொறுமை முதலியவைகளின் காரணமாகவே அநேகமாய் கலீபாவைத் தேர்ந்தெடுப்பதற்காகக் கூடிய மகாசபையில் அபூபக்கர்சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை கலீபாவென ஒப்புக்கொண்டு "பைஅத்" என்னும் பிரமாணம் செய்வதற்காக உமர்கத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் முதன்முதலாக தங்கள் கரத்தைதை நீட்டினுர்கள்.

அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் ஸ்தானத்திலமர்ந்து பெரும் பொறுப்பேற்றுக் கொண்டபிறகு(நன்மையைக் காப்பாற்றுவதற்கான மார்க்கத்தில்) ஒருபெரும் சோதனைக்குரிய சம்பவம் நிகழ்ந்தது. அஃதாவது ஒரு வகுப்பார் ஜக்காத்தைக் கொடுக்காமல் நிறுத்திக்கொண்டார்கள். ஆகவே ஜக்காத் கொடுக்க மறுப்பவர்களோடு போர் புரியவேண்டுமென அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கருதியபோது அதை உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆக்ஷே

பித்து, "கலிமாவை மொழிகிறவர்களோடு எவ்வாறு யுத்தம் செய்யக் கூடும்?" எனவினவினார்கள். ஆயினும் அபூபக்கர்சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், "தொழுகை, ஜக்காத் ஆகிய இவ்விருகடமைகளையும் ஒரே விதமாகக் கருதாமல் இவ்விரண்டினுள் அணுப்பிரமாணமாவது வித்தியாச முண்டெனக் கருதுகிறவர்களோடும், ஒரு ஆட்டுக்குட்டியை (ஜக்காத்து) கொடுக்கக் கடமைப்பட்டவர்களாயினும் அதைக் கொடுக்காமல் நிறுத்திக் கொள்ளுகிறவர்களோடும் ஜிஹாத் செய்து அவர்களை வெட்டுவேன்" என்று வெகு தெளிவாய்க் கூறி விட்டார்கள். இவர்களின் அபிப்பிராயமே களங்கமற்றதென உமர்கத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் பிறகு ஒப்புக் கொள்ளும்படி நேர்ந்தது. (புகாரீ)

இத்தகைய பெருங்காரியங்களைத் தவிர சத்தியப் பிரசாரத்தையொட்டி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் காலத்தில் வேலை செய்ய வேண்டிய சந்தர்ப்பங்கள் பல நிகழ்ந்திருக்கின்றன. அவ்வப்பொழுது செய்யவேண்டியதாக விருந்த காரியங்களைச் செய்து நாயகமவர்கள் தங்களின் கடமையை நிறைவேற்றிவந்தார்கள். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களைப் பின்பற்றிய சஹாபாக்கள் செய்த அரும் பிரசாரம் முழுவதையும் ஒன்றுய்த் திரட்டி வரைவது சாத்தியமற்றதாகும்.

"ஈத்" என்னும் விசேஷதினத்தன்று ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் கிரஹத்தில் பாடிக்கொண்டிருந்த சிலமாதர்களைக் கண்ட ஹஜ்ரத் அபூக்கர்ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பாடவேண்டாமென எச்சரித்தார்கள் ....(புகாரீ)

ஒரு சந்தர்ப்பத்தில் அபூபக்கர் சித்தீக் ரலியில்லாஹு அன்ஹு அவர்கள் ஒருமாது வீற்றிருந்ததற்குச் சமீபமாய் போகும்படி நேரிட்டது. அவ்வமயம் அம்மாது மௌனமாய் இருந்ததைக் கண்டு அருகாமையிலுள்ள ஜனங்களிடம் விசாரித்தார்கள். அதற்கு ஜனங்கள், அம்மாது பூர்வசம்பிரதாயப்படி மௌன விரதத்தோடு ஹஜ்ஜு செய்வதாய் அறிவித்தார்கள். "இச்செய்கை மடமை நிறைந்த காலத்தையொட்டியதாகும். இதை நம்மார்க்கம் அங்கீகரிக்கவில்லை." எனப் பகர்ந்தார்கள்.

அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு, இஸ்லாமின் சக்தி கிலாபத்தின் பெருமை ஆகியவைகளை சத்தியப் பிரசாரத்தை யொட்டி செய்ய வேண்டிய தாகவுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற் குரிய தைரியத்தை யளித்து விட்டதாக எவரும் கருத

வேண்டாம். நிச்சயமாக அவர்கள் கிலாபத்தின் பொருப்பை யேற்றுக்கொள்ளுவதற்கு முன்னும் சதா இவ்வாறே தம் கடமையை நிறைவேற்றி வந்தார்கள். இஸ்லாமிய ஆரம்ப காலத்தில் அதற்குதவி புரிகிறவர்கள் எவரு மில்லாதிருந்துங்கூட இத்தகைய தைரியத்தோடவே தம் கடமையை அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நிறை வேற்றி வந்தார்கள். (உதாரணமாக) ஒரு சமயம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் தொழுது கொண்டிருந்த போழ்து, " அகபாபின் முஹீத் " என்னும் பாதகன், உலகத்திலுள்ள யாவற்றிற்கும் நன்மை யளிக்கத்தக்க சப்தம் வெளியாய்க் கொண்டிருந்த பரிசுத்தமான பிடரியைப் பிடித்தழுத்தினன். இதைக் கண்ட அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அப்பாதகனின் கையைப் பிடித்துத் தூக்கி எறிந்ததோடு " அல்லாஹுத ஆலா ஒருவன் மட்டுமே என்னுடைய நாயன் என்றுகூறும் குற்றத்திற்காகவா ஒரு மனிதரை (நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை) க்கொல்ல முற்பட்டு விட்டீர்கள் ? ஆ விசனமே !" என்று கூறினார்கள் (புகாரி)

உஸ்வயேபாரூகி

உமர்கத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவிய போழ்தும் அவர்களின் கரத்தில் வாளாயுத மிருந்தது. அவர்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவிய பிறகும் அவர்களின் கரத்தில் வாளாயுத மிருந்துவந்தது.

இஸ்லாமின் கௌரவத்திற்கு விரோதமான எவ்வார்த்தையை யாவது எவரேனும் கூறிவிட்டால் உமர்கத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாளாயுதந் தாங்கிய தங்கள் கரத்தை உயர்த்திவிடுவார்கள், என்ற செய்தி ஹதீது ஷரீபின் கிரந்தங்களில் அடுத்தடுத்துக் காண்கின்றோம். (உதாரணமாக) ஹாத்திப்பின் பில்த்திஆ என்பவர் மதினாவிலிருந்து மக்காவாசிகளுக்கு இரகசியமாய் ஒரு கடிதமெழுதினர். அக்கடிதத்தின் மூலமாய் மக்காவாசிகளுக்கு முஸ்லிம்களின் அந்தரங்கமான யுத்த ஏற்பாடுகள் விளங்கிப்போயின. ஆதலின் ஹஜ்ரத் உமர்கத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாளாயுதத்தைத் தாங்கினவர்களாய் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களை நோக்கி "இந் நயவஞ்சகனின் சிரசை வாங்கிவிடுகிறேன். அனுமதி கொடுங்கள்" என விண்ணப்பித்துக் கொண்டார்கள். (புகாரி)

நயவஞ்சகக் கோஷ்டியின் தலைவரான அப்துல்லா ஹிப்னு உபை என்பவர், மதீனு சென்று முகம்மதை (நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை) வெளியேற்றிவிடுவோம். என்று ஒரு யுத்தத்தின் போது கூறினர். உடனே உமர்கத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நாயகமவர்களிடம் சென்று இந்நயவஞ்சகனின் சிரசைவாங்க அனுமதியளியுங்கள் எனக் கேட்டுகொண்டார்கள். ஆனுல் நாயகமவர்கள் இவ்விரண்டு சந்தர்ப்பங்களிலும் உமர்கத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தடுத்துவிட்டார்கள். (புகாரீ)

சத்தியப் பிரசாரம் செய்வதற்கு நளினமான நடத்தை, கவரத் தக்க குணம் சாதுர்யமான வார்த்தை ஆகிய வைகளோடு சுயேச்சை அதிகதைரியம் கொடுமை ஆகியவைகள் வேண்டுவதும் மிக அவசியமே. ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் சத்தியப் பிரசாரம் சம்மந்தமான காரியங்களில் இரண்டாவதாகக் கூறியுள்ள இலக்ஷணங் களே அதிகமாகத் தோன்றுகின்றன. ஹஜ்ரத் உமர்ரலியல்லாஹு அன்ஹு அவர்களிட மிருந்து வந்த இந்த இலக்ஷணங்களன்றி மனிதன் உண்மையைக் காப்பதற்காகவுள்ள சத்திய பிரசாரத்தைச் செய்ய முடியாது.

ஹுதைபியாவின் சமாதானம் பதுர் சண்டை ஆகிய சந்தர்ப்பங் களில் ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நாயகம் ஸல் லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களின் சிற்சில முறைகளை ஆக்ஷேபிக் கும் தைரியத்தைக் காட்டியிருக்கிருர்கள்.

சஹாஹ் என்னும் ஹதீது ஷரீபின் கிரந்தங்களை வாசிப்பவர்கள் ஒவ்வொருவரும் உமர்கத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் இவ்வரிய செய்கைகளைக் நன்கறிவார்கள். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் " அப்துல்லா ஹிப்னு உபையின் ஜனுஸாத் தொழிகையைத் தொழக்கருதியபோது ஹஜ்ரத் உமர்லியல்லாஹு அன்ஹு அவர்கள் தானறியாமலேயே நாயகம் லல்லாஹு அலைஹிவ ஸல்லமவர்களின் வஸ்திரத்தைப் பிடித்துத் தடுத்து விட்டார்கள். (புகாரி)

சத்தியப் பிரசாரம் செய்ய வேண்டுமென்ற நோக்கம் எல்லாசஹாபாக்களிடமுமிருந்தது. ஆயினும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் மனைவிமார்களைப் பற்றிய காரியங்களில் குறுக் கிட்டு அவர்களையும் எச்சரித்ததக்கதைரியம் உமர்ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் மட்டுமே விசேஷமாகத் தோன்றிற்று. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் மனைவியாகிய "ஸெள

தா'' ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் இல்லத்தை விட்டுப்புறப்படக் கூடாதென ஹஜ்ரத் உமர்ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தான் கண்டித்தார்கள (புகாரி)

கோஷாவைப்பற்றிய திருமறையின் ஆயத்தும் உமர்ரலியல் லாஹு அன்ஹு அவர்களின் இவ்வெச்சரிக்கையை ஆதரித்தது.

''ஓ உமர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களே! நாயகம் ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லமவர்களினுடையவும், அவர்களின் மனைவிமார்க ளுடையவும் காரியங்களிற் கூட குறுக்கிடுமளவுக்கு முற்பட்டுவிட்டீர் களா?'' என்று ஹஜ்ரத் உம்முஸல்மா ரலியல்லாஹு அன்ஹா அவர் கள் முறையிடவேண்டியும் நேர்ந்தது. (புகாரீ)

ஹஜ்ரத் அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை எல்லாசஹாபாக்களும் மரியாதை செய்வதற் குரியவர்களா யிருந்துங் கூட அவர்களின் சகோதரி ஒரு சந்தர்ப்பத்தில் துக்கம் மேலிட்டு மார்க்க வரம்பைமீறி ஒப்பாரி வைத்தழுத போது அம்மாதை ஹஜ்ரத் உமர்லிரயல்லாஹு அன்ஹு அவர்கள் வெளியேற்றி விட்டார்கள். (புகாரீ)

உண்மை சத்தியம் ஆகியவைகளை வெளியிடுவதைப்பற்றிய சுயேச்சை தைரியம் வார்த்தை செய்கை முதலியவைகள் எவ்வகையி லும் பெரியாரின் மரியாதையைக் குறைக்கத்தக்கதல்லவென்பது நிச்ச யம். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்கு உமர்ரலியல் லாஹு அன்ஹு அவர்களைக் காட்டினும் அதிகமாய் மரியாதைசெய் பவருமுளரோ ? நாயம் ஸல்லல்லாஹு அஹிலைவஸல்லமவர்களின் கௌரவத்திற்கு விரோதமாக எச்சிறு காரியத்தையும் எவரேனும் செய்து விட்டால் உமர்ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அதைக் கண்டு சகித்திருக்க முடியாதவர்களா யிருந்தனர். நாயகம் ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லமவர்களின் சமுகத்தில் சில மாதர்கள் உயர்ந்த சப்தத்தோடு சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். அவ்வமயம் அங்கு உமர்ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வருவதை யறிந்த அம்மாதர் கள் பதறினவர்களாய் ஓடவாரம்பித்தார்கள்..............................
....

அப்பொழுது, ''உங்கள் உயிருக்கு பகைவர்களான ஓ மாதர்களே! நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக் காட்டினுமா எனக்கு அதிகமாகப் பயப்படுகிறீர்கள் ?'' என்று உமர்ரலியல்லாஹு அவர்கள் கேட்டார்கள்.

ஹதீதுஷரீபின் ரிவாயத்து எவ்வளவு அவசியமாக விருக்கிறதோ அவ்வளவு கஷ்டமாகவு மிருக்கின்றது. ஸஹாபாக்களின் காலத்தில் வேண்டுமென்றே பொய்யாகவும் தவருகவும் ஹதீதுஷரீபின் ரிவாயத்துகளைச் செய்வதற்கு ஹேதுவில்லாமலிருந்தது. ஆயினும் தற்செயலாய் தவறுகள் நிகழ்ந்துவிடுமென்ற சந்தேகம் இருந்தது. சில சந்தர்ப்பங்களில் தவறுகள் நிகழ்ந்தும் விட்டன. (உதாரணமாக ஹஜ்ரத் ஆயிஷாரலியல்லாஹு அன்ஹா, ஹஜ்ரத் இப்னு உமர்ரலியல்லாஹு அன்ஹுமா, ஹஜ்ரத் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு, ஹஜ்ரத் அப்துல்லாஹிப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா ஆகியவர்களின் ரிவாயத்துகளை ஒருங்கே கவனித்தால் விளங்கும்). ஆனதுபற்றியே ஹதீதுகளை அஜாக்கிரதையாக மிகுதமாய் ரிவாயத்துசெய்வதை யொட்டி ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கடுமையான முறையில் எச்சரித்து வந்தார்கள். உதாரணமாக ஹஜ்ரத் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹதீது ஷரீபின் மிகுதியான ரிவாயத்துகளை செய்துகொண் டிருந்தபோழ்து ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி "தாங்கள் ரிவாயத்து செய்வதில் ஜாக்கிரதையாக விருக்க மாட்டீர்களாயின் (உங்களை) சாட்டையால் அடித்து வெளியேற்றும்படிச் செய்வேன்" என்றறிவித்தார்கள்.

ஹஜ்ரத் உமர்ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் சத்தியப்பிரசாரத்துள் ஹதீது ஷரீபையொட்டி அதிக ரிவாயத்துகள் செய்யக் கூடாதென தடுத்து வந்தகாரியங்கள் விசேஷ உயர்வையுடையதாக விருக்கின்றன. ஒரு சந்தர்ப்பத்தில் ஹஜ்ரத் அபூமூஸாஅஷ்அரீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் உமர்ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு மும்முறை ஸலாம் செய்தார்கள். அதற்கு விடையளிக்காமல் உமர்ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஏதோபாராமுகமா யிருந்தார்கள். ஆகவே அபூமூஸாஅஷ்அரீ ரலியல்லாஹு அன்ஹு திரும்பிச் சென்றூர்கள். உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களின் காரியம் முடிந்தபிறகு அபூமூஸா அஷ்அரீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களை யழைத்து திரும்பிச் சென்றதற்குக் காரணமென்ன வென்று வினவியதற்கு அபூமூஸாஅஷ்அரீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் 'மும்முறை அனுமதி கோரியும் அனுமதி கிடைக்காவிடின் திரும்பிப் போய்விடவேண்டும்'' என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அறிவித்திருக்கிறூர்கள், என்று கூறியதும் இந்த ஹதீது உண்மையென்பதற்குச் சாக்ஷியம் வேண்டுமென்று ஹஜ்ரத் உமர்ரலியல்

லாஹு அவர்கள் அபூமூஸா அஷ் அரீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களைக் கேட்டார்கள், அப்பொழுது இந்தஹதீது உண்மைதானென அபூ ஸயீதுகதரீ சாக்ஷிசொன்னபின் அவர்களின் வஸ்திரத்தை ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் விட்டார்கள். (புகாரீ)

ஈசா அலைஹிஸ்ஸலாம் ஜீவித்திருக்கவில்லையா?

(ஈசா அலைஹிஸ்ஸலாம் மரணமடைத்து விட்டதாகக் கூறுவோர் உண்மையில் மிர்ஸாகுலாம் அஹ்மத் காதியானியை "மஹ்தீ" யென்றும் "ஈசா" என்றும் தாவாச் செய்கிறவர்களே)

"எமக்குப்பின் நபிகள் வருவதில்லை யென்னும் உண்மைக்கு மாறாக தங்களை நபியென்று கூறும் முப்பது பொய்யர்கள் அவசியம் தோன்றுவார்கள்" என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் அருளிய திருவாக்கிலிருந்து மிர்ஸாகுலாம் அஹ்மத் காதியானீ தம்மை நபியென்று செய்த தாவா ரத்தாகி அன்னவர் பொய்யரென்றும் உறுதியாகி விடுகிறது.

பாத்திமா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் சந்ததியில் மஹ்தீ அலைஹிஸ்ஸலாம் தோன்றுவார்களென நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் அருளிய திருவாக்கின் மூலமாய் மிர்ஸா ஸாஹிப் தம்மை மஹ்தீ என்று கூறிவந்தது பொய் யெனத் தீர்மான மாகி விட்டது.

மிர்ஸா ஸாஹிப் தம்மை ஈசா என்றும் கூறியதால், அன்னவர் ஈசாவா? அல்லது மஹ்தியா? என்று கேட்கப்பட்டது. இதற்கு ஈசா தான் மஹ்தீ, மஹ்தீ தான் ஈசா வென்றும், ஈசாவும் மஹ்தீயும் ஒருவர் தான் என்றும் மிர்ஸா சாஹிப் கூற ஆரம்பித்து விட்டார். ஆயினும் ஈசா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஜீவித்திருக்கிறார்கள் என்னும் மேற் கோள்களும், மஹ்தீ அலைஹிஸ்ஸலாம் இனி உலகில் ஜனனமாவார்க ளென்றும் ஈசா அலைஹிஸ்ஸலாம் வானத்திலிருந்து இரங்குவார்க ளென்று முள்ள ஸஹீஹான ஹதீதுகளும் மிர்ஸா ஸாஹிப்பின் இவ்வார்த்தையைக் கூட ரத்து செய்துவிடுகின்றன. ஆனது பற்றியே மிர்ஸாகுலாம் அஹ்மத் ஸாஹிபும் அவரின் கோஷ்டியார்களான அஹ்மதியாக்களும் ஈசா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தேகத்தோடு வானத்திற் குயர்த்தப்பட்டார்கள் என்பதையும்

மீண்டும் வானத்திலிருந்து இரங்குவார்கள் என்பதையும் மறுத்து ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மரண மடைந்து விட்டார்களெனக் கூற முன்வந்து விட்டனர்.

ஆதலின் ஈசா அலைஹிஸ்ஸலாம் மரணமடைந்து விட்டதாக வுள்ள கூற்றை ரத்துசெய்து ஈசா அலைஹிஸ்ஸலாம் ஜீவித்திருக்கிறார் ளென்று நிரூபித்து நம் உலமாக்கள் பலகிதாபுகளை வரைந்திருக் கின்றனர். அவைகளுள் சில வற்றின் அட்டவணை வருமாறு:—

(1) "அல்இல்ஹாமுஸ்ஸஹீஹ் பீ ஹயாத்துல்மஸீஹ்":—இந் நூலில் ஈஸாஅலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஜீவித்திருக்கிறார்களென்பதை மெய்ப்பிக்கப்பட்டிருப்பதோடு ஈசா அலைஹிஸ்ஸலாம் மரணமடைந்து விட்டதாகக்கூறி மிர்ஸாகுலாம் அஹ்மத்காதியானீ எடுத்துக்காட்டும் அத்தாட்சிகளைத் தக்க ஆதாரங்களோடு மறுக்கப்பட்டிருக்கின்றது. இது மிர்ஸாஸாஹிப் தாவாச்செய்த ஆரம்பகாலத்திலேயே அஃதாவது ஹிஜ்ரீ 1311ல் அம்ரத்ஸரைச் சேர்ந்த மௌலானா "அபூஸுபைர் குலாம்ரசூல் அவர்களால் இயற்றப்பட்டு அச்சாகியிருக்கிறது, மௌலானா அவர்கள் இக்கிதாபில் "மிர்ஸாஸாஹிபாவது அவருடைய பிரதிநிதியாகிய ஹகீம்நூருத்தீன் ஸாஹிபாவது இதற்கு மறுப்பெழு தினால் அதையும் மறுக்க சித்தமாயிருக்கிறேன்" என்றும் வரைந்துள் ளார்கள். ஆயினும் இது வரையெவரும் இதை மறுக்கக் கூட வில்லை.

(2) அல்பத்ஹுர்ரப்பானீ:—இது ஈசா அலைஹிஸ்ஸலாம் ஜீவித்திருக்கிறார்கள் என்று மெய்ப்பித்து அரபியில் எழுதப்பட்டிருக் கும் கிரந்தத்தின் உர்தூமொழி யெர்ப்பு. இதுவும் தெஹ்லியில் ஹிஜ்ரீ 1311ல் அச்சாயிருக்கின்றது.

(3) "தஷ்னீதுல் மபானீலிரத்தில் காதியானீ" :-ஈசா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் மரணமடைந்து விட்டார்களா? அல்லது ஜீவித்திருக் கிறார்களா? என்பதைப்பற்றி மௌலானா ஹாபிஸ் அபூஅப்துல்லாஹ் சாஹிப் அவர்களுக்கும் அஹ்மதியாமௌல்வி அப்துல் வாஹித் ஸாஹிப் அவர்களுக்கும் மத்தியில் எழுத்து மூலமாய் விவாதம் நடை பெற்று முடிவில் அஹ்மதியா மௌல்வி ஸாஹிப் விடையளிக்க முடியா மல் மௌனஞ் சாதித்துவிட்டார். பிறகு மௌலானா அவர்கள் மேற் கூறப்பட்டுள்ள விவாதசம்மந்தமான வரலாற்றை வரைந்துவிட்டு ஈசா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஜீவித்திருக்கிறார்கள் என்பதை மெய்ப் பித்து மிகத்தெளிவாகவும் விரிவாகவும் எழுதியிருக்கிறார்கள்.

(4) "ஷம்ஷுல் ஹிதாயத்து":—இது மௌலானா பீர் மெஹர் அலீஷா ஸாஹிப் அவர்களால் இயற்றப் பெற்று ஹிஜ்ரீ 1322ல் லாஹுரில் அச்சாகியிருக்கின்றது. இதில் ஈஸா அலைஹிஸ்ஸலாம் ஜீவித்திருக்கிறார்களென்பதை தக்க ஆதாரத்தோடு வரையப் பட்டிருக்கிறது.

(5) "ஸைஃப சிஷ்தியாயீ." இதுவும் பீர்ஸாஹிப் அவர்கள் இயற்றியதே. இதற்கும் மிர்ஸாஸாஹிப் அவர்கள் விடையளிக்கக் கூடவில்லை.

(6) "அல்ஹக்குஸ்ஸரீஹ் பீஹயாத்துல்மஸீஹ்" இஃது மௌலானா பஷீர் அஹ்மத்ஸாஹிப் அவர்களால் இயற்றப் பெற்று ஹிஜ்ரீ 1309 ல் டில்லியில் அச்சாகி யிருக்கின்றது. ஈசா அலைஹிஸ்ஸலாம் ஜீவித்திருக்கிறார்களென்பதை நிரூபித்து இதில் வரைந்துள்ள மேற்கோள்களுக்கு விடையளிக்கமுடியாமல் மிர்ஸாஸாஹிப் டில்லியைவிட்டுக் காதியானுக் கேகும்படி நேர்ந்தது.

(7) "அல்பயானுஸ்ஸஹீஹ் பீஹயாத்துல் மஸீஹ்." இது லக்ஷ்மணபுரியில் அச்சாகியிருக்கின்றது.

(8) "ஷஹாதத்துல்குர்ஆன்" (முதற்பாகம்) இது மௌலானா இப்ராஹீம் ஸாஹிப் அவர்கள் இயற்றியது. இதில் குர்ஆன்ஷரீபின் ஆயத்துகளையே ஆதாரமாகக் காட்டி ஈசாஅலை ஹிஸ்ஸலாம் அவர்கள் ஜீவித்திருக்கிறார்களென்பதை உறுதி செய்யப் பட்டிருக்கின்றது.

(9) "ஷஹாதத்துல் குர் ஆன்" (இரண்டாம் பாகம்) ஈசா அலைஹிஸ்ஸலாம் மரணமடைந்து விட்டதாக மிர்ஸாஸாஹிப் கூறியுள்ள விஷயங்களை யெல்லாம் இதில் மறுத்தெழுதப்பட்டிருக்கின்றது. இதற்கு மிர்ஸாஸாஹிப் தம் ஆயுள் பரியந்தம் விடையளிக்கக்கூடவில்லை.

(10) "மதாஹிபுல் இஸ்லாம்" இப்புத்தகத்தின் இறுதியில் ஈசா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மரணமடைந்து விட்டார்களா? அல்லது ஜீவித்திருக்கிறார்களா? வென்பதைப் பற்றிய நீண்டதொரு தர்க்கத்தின் முடிவில் ஈஸா அலைஹிஸ்ஸலாம் ஜீவித்திருக்கிறார்களென தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இது1914 ல் அச்சாகியிருக்கிறது இதற்கும் அஹ்மதியாக்கள் மறுப்பெழுத முன் வரவில்லை.

(11) 'ஸஹீபயேரஹ்மானியய்யா' இது மௌலானா மௌல்வி ஸையித் அன்வர்ஹுஸைன்ஸாஹிப் (முவன்கீர்காலேஜின் புரோபஸர்) அவர்கள் எழுதியது. ஈசா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மரண

மடைந்து விட்டதாக கூறுகிறவர்கள் தங்களின் கூற்றுக்கு ஆதார மாக எடுத்துக் கொண்டிருக்கும் "துவப்பா" என்னும் பதத்தின் அர்த்தத்தைப் பற்றி இதில் நல்ல விவாதம் செய்யப்பட்டிருக்கிறது. ஈசா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் மரணமடைந்துவிட்டதாகக் கூறும் அஹ்மதியாக்க ளின் இடுப்பு (இப்பிரசுரத்தின் மூலமாய்) முறிந்து போயிற்று.

(12) லச்சுமணபுரியில் பிரசுரமாகும் "அன்னஜ்ம்" என்னும் மாதாந்த சஞ்சிகை பிரதி. 10, 13.

"முப்தீஸாதிக்," குலாம்ஸர்வர், ஆகிய இருவரும் லச்சுமண புரிக்கு வந்திருந்தபோது அன்னவர்களிடம் மிர்ஸாகுலாம் அஹ்மத் ஸாஹிபை ஈசாவென்றும், வாக்குச் சொல்லப்பட்ட மஹ்தீயென்றும் செய்யப்படும் தாவாவிற்கு ஆதாரங்காட்டும்படி இஸ்லாமிய உலமாக் கள் கேட்டதற்கு விடையளிக்க அன்னவர்கள் மறுத்துவிட்டார்கள். ஆனால் கடைசியில் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மரணமடைந்து விட்டார்களா? ஜீவித்திருக்கிறார்களா? என்பதைப்பற்றி விவாதஞ் செய்ய ஒப்புக்கொண்டார்கள். ஆயினும் விஷயத்தை யெழுதி தங்க ளுக்கு அனுப்பினால் அதற்குத்தங்களின் விடையை வெளியிடுவதா கச் சொல்லிவிட்டுப் போனார்கள். ஆகவே "அன்னஜ்"மின் ஆசிரிய ரான மௌல்வி அப்துஷ்ஷுகூர் ஸாஹிப் அவர்கள் தங்களின் 10,13 பிரதிகளில் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மரணமடையவில்லை ஜீவித்திருக்கிறார்களென எடுத்துக்காட்டி பிரசுரித்தார்கள். இதற்கு அவ்வஹ்மதியாக்கள் பதிலெழுதவில்லை. பிறகுமிர்ஸாஸூஹிபின் புத் திரர் லாகூர் சென்றிருந்தபோழ்து ஈஸா அஹிஸ்ஸலாம் அவர்கள் ஜீவித்திருப்பதாகத்தீர்மானித்து "அன்னஜ்ம்" எழுதியிருக்கும் வியா சத்திற்குத் தாங்கள் ஏன் பதிலெழுதவில்லையென லாகூர் வாசிகள் கேட்டபோழ்து அன்னவர் விடையளிக்க முடியாமல் மௌனஞ் சாதித்துவிட்டார்.

(13) "மவாஸனச்துல் ஹகாயிக்" ஈசாஅலைஹிஸ்ஸாலம் மரண மடைந்து விட்டார்களென்று வரையப்பட்டிருக்கும் கிதாபுகளையும், ஈஸா அலைஹிஸ்ஸலாம் ஜீவித்திருக்கிறார்களென்று வரையப்பட்டிருக் கும் கிதாபுகளையும் பார்வையிட்டு லாஹூர் பைசா அக்பார் என்னும் பத்திரிகைக்குச் சொந்தக்காரரான மௌல்வீ முகம்மத் அக்பர் ஸாஹிப் அவர்கள் பாரபக்ஷமின்றி பார்ஸீ பாஷையில் எழுதிய நியாயத்தீர்ப்பு. இதுவும் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஜீவித்திருப்பதாகவே கூறு கின்றது.

(14) " துர்ரத்துத்துர் ரானீ அலா ரத்தில் காதியானீ " இதிலும் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மரணமடையவில்லை யென்றும், நிச்சயமாய் ஜீவித்திருக்கிறார்க ளென்றும் நிரூபிக்கப்பட் டிருக்கிறது.

(15) தக்க மேற்கோளின் மூலமாய் ஈசா அலை ஹிஸ்ஸலாம் அவர்கள் ஜீவித்திருக்கிறார்கள் என நிச்சயித்து மௌலானா ஜனுப் அஷ்ரப் அலிதானவீ அவர்களும் ஒரு கிதாபை இயற்றியிருக்கிறார்கள். அதன் நாமம் தஹ்கீக்குல் மஹ்தீவல் மஸீஹ் அவசியமேற்படின் மேலே வரையப்பட் டிருக்கும் கிதாபுகளுள் சிலவற்றை இன்ஷா அல்லாஹு தஆலா தமிழில் வெளியிடுவோம்.

ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மரணமடைந்து விட்டதாகக் கூறுவதால் ஈமான்போம் விடுமா ? என்று வினவும் அஹ்மதியாக்களை நோக்கி ஈசா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஜீவித்திருக்கிறார்கள் என்னும் கொள்கையால் ஈமான் போய்விடுமா ? என்று கேட்கப்படுமல்லவா ? ஈசா அலைஹிஸ்ஸலாம் மரணமடைந்து விட்டார்கள், அல்லது ஜீவித்திருக்கிறார்கள் என்னும் இருவிதக் கொள்கைக்கும் ஈமானுக்கும் சம்பந்தமில்லையென அஹ்மதியாக்கள் கூறுவார்களாயின், ஈசா அலைஹிஸ்ஸலாம் ஜீவித்திருக்கிறார்கள் என்னும் கொள்கையை மாற்றி அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்னும் கொள்கையை அன்னவர்கள் பிரசாரம் செய்யவேண்டிய தேன் ?

மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானீயை ஈசா வென்றும், மஹ்தீ யென்றும் செய்யப்படுகிற தாவாவை முன்னிட்டே ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மரண மடைந்து விட்டதாகக் கூறவேண்டிய அவசிய மேற்பட்டு அஹ்மதியாக்கள் இவ்வாறு கூறிவருகிறார்களென மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் தெளிவாகப் பகர்ந்துள்ளார்கள். ("அல்கலாம்" 2வது வாய்யூம் 32-வது பக்கம் பார்க்க) உண்மை யிவ்வாறிருக்க "மிர்ஸா குலாம் அஹ்மதை நபியென்றேனும், மஸீஹ் என்றேனும், மஹ்தீ யென்றேனும் கூறும் விஷயத்தில் எந்த அஹ்மதியா இயக்கத்துடனும் எமக்குச் சம்மந்தமில்லை" என்று கூறும் பா. தாவுத்ஷா அவர்கள் "முன் ஜீவித்திருந்த இஸ்ரவேல் கூட்டத்தின் இயேசுவானவர் இறந்துவிட்டா ரென்பதே எமது துணிபு ;" என்றும் "மரியத்தின் மகனின் வருகையானது அந்த இறந்துபோன ஈசா நபி (அலை) அவர்களின் வருகை யன்றென்பதும் எமது கொள்கையாகும்" என்றும் கூறவேண்டிய அவசியம்யாதோ ? இவை அஹ்மதியாக்களின் வழிகேடான கொள்கையன்றி சுன்னத் ஜமாஅத்தின் நேரான கொள்கையா ?

தாருல் இஸ்லாம் ஆசிரியரும் கப்பலில் ஜும்ஆவும்

ஜும் ஆத்தொழுகை கடமையாவதற்கான நிபந்தனைகள் ஒன்ப துள் வழிப்போக்கனுகவன்றி பட்டினத்தில் வசிப்பவனுக விருப்பதும் ஒன்று. அன்றியும் ஜும்ஆத் தொழுகை நிறைவேறுவதற்கான நிபந்தனை ஏழில் ஜும்ஆவைத் தொழுமிடம் பட்டினமாகவிருக்க வேண்டுமென்பதும் ஒன்றாகும். பட்டினமா அல்லவா வென்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கும் இடத்தில் ஜும் ஆத்தொழுதால், மீண்டும் "ஆகர் ளுஹர்" என்று நான்கு ரகஅத்துத்தொழ வேண்டுமென் றும் பிக்ஹு கிதாபுகள் கூறுகின்றன.

அன்றியும் ஜும்ஆத்தொழுமிடம் முஸ்லிம்கள் எத்தடையுமின்றி பிரவேசிப்பதற் குரிமையுள்ள பொதுஸ்தலமாக விருக்கவேண்டும்.

"முஸாபர்" (வழிபோக்கர்) ஜும்ஆவன்று பட்டினத்தில் ளுகர் தொழுகையை ஜமாஅத்தோடு தொழுவது "மக்ருஹ்தஹ்ஹரீம்" என்றும் வருகிறது. ஜும்ஆத்தொழுகைக்கு முன் இரண்டு குத்பாக் கள் ஓதப்பட வேண்டுமென்றும், இரண்டு குத்பாக்களுக்கும் மத்தியில் உட்காரவேண்டுமென்றும் அல்லாஹு தஆலாவின் துதி, வஸிய்யத்து, ஸலவாத்து ஆகியவைகள் பொதுவாக இவ்விரண்டு குத்தபாக்களில் அடங்கியிருப்பதும்,குறிப்பாக இரண்டாவது குத்பாவை குர்ஆன்ஷரீ பின் ஆயத்து, முஸ்லிம்களின் நன்மையைக் கோரிய துஆ ஆகியவை களைக் கொண்டு முடிப்பதும் குத்பாக்களைப் பொருத்த முக்கியமான அம்சங்களாகும்,

சிலஉதாரணங்களாவன:—

பல்லாயிரக்கணக்கான ஹாஜிகள் கூடும் மக்கமா நகரையடுத் துள்ள "அரபா" வென்னும் புனித பூமியிலுங்கூட ஜும்ஆவன்று ஜும் ஆவைத்தொழுதால் அத்தொழுகை நிறைவேருதென்று "கண் ஜு," "ஷரஹ்விகாயா" முதலிய கிதாபுகள் கூறுகின்றன. இதற்குக் காரணம் "அரபா" பட்டணமல்லவென்பதே.

ஓர் அரசர் தம்கோட்டை வாயிலை அடைத்து விட்டு அக் கோட் டையினுள்ளிருக்கும் மஸ்ஜிதில் தன் பரிவாரங்களோடு ஜும் ஆத் தொழுதால் இத் தொழுகையும் நிறைவேருது. காரணம் முஸ்லிம்

பொதுமக்கள் அம்மஸ்ஜிதுக்குள் வருவதற்குரிமையற்றிருப்பதே யாகும்.

இலக்ஷக்கணக்கான முஸ்லிம்கள் சேகர மாகும் "அரபா" பட்டினமல்லவென்று தீர்மானிக்கப்பட்டிருக்கும் போது சில ஜனங்களை ஏற்றிக்கொண்டு சமுத்திரத்தில் மிதக்கும் கப்பலைப் பட்டினமாகப் பாவிக்க மார்க்கம் இடந்தருமா ?

எத்தடையுமின்றி முஸ்லிம் பொது மக்கள் பிரவேசிக்க முடியாத மஸ்ஜிதுகளிலுங் கூட ஜும் ஆத்தொழுதால் அத்தொழுகை நிறைவேருதென நம்மார்க்க பிக்ஹு சட்டங்கள் கூறும் நிலைமையில் பிரயாணச் சீட்டுப் பெருதவர்கள் பிரவேசிக்க முடியாத கப்பலில் எவ்வாறு ஜும் ஆத்தொழுகை நிறை வேறும் ?

ஜும்ஆ சம்மந்தமான சட்ட திட்டங்கள் இவ்வாறிருப்பதால் "தாருல் இஸ்லாம்" ஆசிரியர் அவர்கள் எலங்காக் கப்பலில் ஜும் ஆத் தொழுததாக "சுதேசமித்திரன்" 16. 2. 25, பத்திரிகையில் பிரசுரமாகி யிருந்ததைக் கண்ணுற்ற முஸ்லிம்கள் ஆச்சரியமுற்றுர்கள்.

சுதேசமித்திரனில் பிரசுரமாகி யிருந்தது வருமாறு

எலங்காவில் ஜு ஆ பிரசங்கம்

"13-2-28 வெள்ளி யன்று பகல் 1-மணிக்கு எஸ். எஸ். எலங்காகப்பல் காரைக்காலுக் கெதிரில் நங்கூரம் பாய்ச்சியிருந்த போழ்து, சென்னை தாருல் இஸ்லாம் ஆசிரியர் ஜனப். பா. தாவூத்ஷா ஸாஹிப் அவர்களால் "இஸ்லாத்தின் தாத் பரியமும் அதன் தூனிப் பட்ட மகிமையும்" என்பதைப் பற்றி ஜும்ஆ பிரசங்கம் தமிழில் ஒரு மணி நேரம் மிக இனிமையாய்ச் செய்யப்பட்டபின் அக் கப்பலின் மீதே ஜும் ஆத்தொழுகையும் நிறைவேற்றப்பட்ட தென்று ஜனப் ஒ. இ. முகம்மது ஷரீப் நாகப் பட்டினத்தில் கப்பலிலிருந்தே அறிவிக்கின்றுர்."

இச் செய்தி வெளியானது முதற் கொண்டு கப்பலில் ஜும் ஆத் தொழுததற்குக், காரணமும், அத்தொழுகை நிறை வேறு மென்பதற்குத்தக்க ஆதாரணங்களும் காட்ட வேண்டும் என்று ஜனப். பா. தாவூத்ஷா ஸாஹிப் அவர்கள் வினவப்பட்டு வந்தார்கள். ஆதலின் அவர்கள் ஜூன்மாதத்து "தாருல் இஸ்லாமி"ல் வரைந்துள்ள விடை வருமாறு ;—

"..குத்பாவின் கருத்து" நஸீஹத் (உபதேசம்); ஆதலின் அதை ஏன் தமிழில் செய்வது கூடாது? இவ்வாறு தமிழில் உபதேசம் செய்யக் கூடியவர்கள் பிரயாணம் செய்ய நேருங்கால் இடையில் வெள்ளிக்கிழமை வந்து விடுமாயின், அப்பிரயாணத்திலிருப்போர் அவகாசம் நேருமாயின் அன்று பகல் வேளையில் ளுஹர்தொழுகையை மட்டும் கஸ்ராகத்தொழுவதைக் காட்டினும், இஸ்லாத்தின் பெருமையையும் அல்லா(ஹ்) ரசூல் இவர்களின் பெருமையையும் அவர்களுள் ஒருவர் சிறிது நேரம் பிரசங்கம் செய்தபின்னர் எல்லோரும் ஏகோபித்து அவ்வாண்டவனைத் தொழுதால் அதனுல் விளையும் தீங்குதான் என்னே! எமக்குத் தெரிந்தவரையில் மார்க்க ஆசாரப் பிரகாரமும் இதனுல் ஒருபாவமும் இல்லையென்றே தோன்றுகின்றது. சம்பிரதாயக் கக்ஷிக்காரருக்கு ஆக்ஷேபம் காணப்படலாம். ஆனுல் பகுத்தறிவுக்கு இதில் என்ன முரண்பாடு காணப்படுதல் கூடும். ஆண்டவனுடைய அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ்? அவனை வணங்குவதற்கும் ஸ்தோத்திரிப்பதற்கும் ஏதேனும் வேலிபோடப் பட்டுளதோ? பக்தனொருவன் தன் பக்தி மேலீட்டால் ஆண்டவன் முன்பணிந்து கிடந்து பஜிப்பதற்கு இன்ன இடம் தக்கதென்றும், இன்ன இடம் தகாதென்றும் அணை போடுதல் சாலுமோ? ஆ என்னபுதுமை! என்ன சம்பிரதாயம்! பக்தி மேலீட்டால் பஜிப்பதற்கும் வேலிபோடுவாரோ? வெறுமையாய்த் தொழுவதைக் காட்டினும் வேறு பலபஜனைகளுடன் கூடிய உபதேசங்களையும் சேர்த்துக்கொள்வதால் அல்லாஹ்வுக்கு என்ன பொல்லாப் வந்துவிடும்."

ஒருவன் புரிந்த குற்றத்தையொட்டி விசாரிக்கப்பட்ட போது அவனளித்த விடை அக்குற்றத்தைக் காட்டினும் கொடியதாக விருந்ததென்று விளங்கும் கதைக் கொப்பாகவே தாருல் இஸ்லாம் ஆசிரியரவர்கள் எதையோ வரைந்து விட்டார்கள். ஆதலின் இது சம்மந்தமாய் இன்ஷா அல்லாஹு தஆலா பிறகு எழுதுவோம் (ப-ர்.)

இவ்வருடத்திய ஹஜ்ஜு

முஸ்லிம்கள் இவ் வருடம் ஹஜ்ஜுக்குப் போகாமல் தடுத்துவிடும் பொருட்டு எத்துணையோ சூழ்ச்சிகள் செய்யப்பட்டன. ஹிஜாஸில் வசிக்கும் உத்தமர்களைப் பட்டினிபோடவும் சத்தியபிரசாரகரென விளங்கும் சுல்தான் இப்னுசஊத் அவர்களை இஸ்லாமிய உலகத்தின் நிந்

தனைக் குள்ளாக்கவும், வேண்டுமெனக் கருதி புரிந்த காரியங்கள் மிக விநோதமாக விருந்தது. ஹஜ்ஜைத் தடுத்து நிற்போர் இன்னாரென்று வெளியாகா திருக்கும்பொருட்டுப் பல திரைகள் போடப்பட்டிருந்தன.

ஆயினும் முஸ்லிம்கள் தங்களின் விரோதிகளை நடுப்பகலின் சூரியனைப்போல் கண்டுகொண்டனர்.

ஜித்தா துறைமுகம் அமீரலியின் ஸ்வாதீனத்திலிருக்கும் நிலைமையில் ஹஜ்ஜுக்குப் போக சாத்தியப்படாதென்று முஸ்லிம்கள் உத்தேசித்திருந்தது உண்மையே. ஹஜ்ஜு தடையுண்டு போமாயின் விளையக் கூடியனவாகவிருந்த விபரீதங்களை சுல்தான் அவர்கள் செவ்வனே அறிந்திருந்தார்கள். ஆதலின் ஜித்தாவுக்குப் பதிலாக இவ்வருடம் ஹஜ்ஜுக்கு வருவோர் "கன்பிதா" "லீத்" "ராபிஃ" ஆகிய மூன்று துறைமுகங்களிலும் இரங்கி வரலாம் என்று சுல்தான் அவர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டார்கள். இவ்வறிக்கையை நம்பி ஹஜ்ஜுக்குப் போவது சரியல்லவென்று கூறி அரசாங்கத்தாரும் மற்றுஞ் சிலரும் வெகுபாடுபட்டார்கள். ஆயினும் என்ன கஷ்டம் நேரிடினும் முஸ்லிம்கள் இவ்வருடம் ஹஜ்ஜுக்குப் போகத்தான் வேண்டுமென்று கிலாபத்துத் தலைவர்கள் பிடிவாதமாக விருந்தார்கள். ஆதலின் ஹாஜிகளை யேற்றிச் சென்று "ராபிஃ" துறைமுகத்தி லிரக்கிவிடும்படி கப்பல் கம்பனிகளுக்கு அரசாங்கத்தர் அனுமதி யளித்தார்கள்.

மேற்கண்ட மூன்று துறைமுகங்களுள் "கன்பிதா" வில் இரங்குவது ஹாஜிகளுக்கு சௌகர்யமாக விருக்குமென்று சுல்தான் இப்னுசுஊத் அவர்கள் அறிவித்திருந்ததற்குமாறாக "ராபிஃ" துறைமுகத்தில் ஹாஜிகளை இரக்கவேண்டுமென்று அரசாங்கத்தார் ஏற்பாடு செய்தார்கள். பிறகு "ராபிஃ" துறைமுகத்தின் மீது அமீர் அலியின் கப்பல் குண்டுப் பிரயோகஞ்செய்து கொண்டிருப்பதாக வெளியிட்டு ஹாஜிகள் முதலாவதாக ஏற்றிச்சென்ற கப்பல் சூடான் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டது "ராபிஃ" துறைமுகத்தில் குண்டுப் பிரயோகஞ்செய்வதாக அறிவிக்கப்பட்ட அமீர் அலியின் கப்பல் சம்மந்தமாக பிரிட்டிஷார் நடந்து கொண்டவைகள் மன்னிக்கத்தகாததே. எடுத்துரைக்க முடியாத இன்னல்களினூடேயும் முஸ்லிம்கள் மக்கமா நகரையடையும்படி அல்லாஹுத ஆலா கிருபைசெய்து விட்டான். இந்நன்றிக்காகவும் நாம் அல்லாஹுத ஆலாவுக்கு "ஷுக்ர்" செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.